திராவிடநாடு

A. RAJAGOPALAN,
10 BIG BAZAAR STREET,
MANNARGUDI.



கேளாய் சேதி!

தான் மட்டுமா! தன் வயிற்றில் பிறந்த தங்கமுமன்றோ தன்னோடு தத்தளித்துத் தவிக்கிறது. எத்தனை நாளைக்குத்தான் இப்படி பசியோடும் பட்டினியோடும் காலந்தள்ள முடியும்? அதனால் வேதனை தாங்காது, தன்னுடையப் பெண் குழந்தையையும் கிணற்றில் தள்ளிவிட்டு, தானும் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தாளாம் தர்மபுரியைச் சேர்ந்த மூலக்காடு கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தாயி என்கிற மாது. வழக்கு, சேலம் நீதிமன்றத்தில் நடைபெறுகிறது.

*

சிதம்பரம் தாலுகாவிலுள்ள உடையார் குடியில் நடராச முதலியார் என்பவரின் மனைவி அபிராமி. அடிக்கடி, கணவனுக்கும் மனைவிக்கு மிடையில் தகராறு வருவதுண்டு. மார்ச் 13ம் தேதி, மனைவி அரிசி வாங்கியது குறித்து இருவருக்கும் சண்டை மூண்டது. அதன் விளைவாகக் கணவர் மனைவியைப் போட்டு அடிக்கவே, 'எத்தனை நாளைக்குத்தான் இப்படி அவதிப்படுவது?' என்று கலங்கிய அந்த அன்னை, தன்னுடைய மூன்று பெண் குழந்தைகளுக்கும் ஊமத்தங்காயைக் கொடுத்துத் தின்னச் சொல்லிவிட்டு, அவரும் தின்னும் போது, கணவன் வந்து பதறித் துடித்து ஆசுபத்திரிக்குக் கொண்டு சென்றார். குழந்தைகள் மூன்றும் செத்தன. குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்த அபிராமி, பிழைத்துக்கொண்டார். அவர் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்யவே, கடலூர் நீதிமன்றக் கூண்டில் அபிராமி அம்மை நிற்கிறார்.

*

ஆறு ரூபாய் காசு! அதை, அப்பாவுக்குத் தெரியாமல் எடுத்துச் செலவு செய்து விட்டான் முனுசாமி என்கிற வாலிபன். வீட்டுக்குப் போனால் அப்பா கேட்பாரே என்ற பயம். அதனால், வீட்டுக்குப் போகாமலே இரண்டு மூன்று நாட்கள் சுற்றிக் கொண்டிருந்தான். வேதனையும் விசாரமும் குடையவே, சென்னையிலுள்ள ஆழ்வார்ப்பேட்டையிலிருக்கும் ஒரு கிணற்றில் விழுந்து, தற்கொலை செய்து கொண்டிருக்கிறான், கடந்த 5ந் தேதி. ஒரு உயிர்! ஆறு ரூபாய் காசுக்காக!!

*

15½ ரூபாய் பெறுமானமுள்ள காதணிகளுக்காக யாரோ, ஐந்து வயதுள்ள சின்னஞ் சிறு ஆண் குழந்தையைக் கிணற்றில் போட்டுக் கொலை செய்திருக்கிறார்கள், அய்யனாவரத்தில்! இராமமூர்த்தி எனும் பெயர் கொண்ட அக்குழந்தை, தெருவில் விளையாடப் போயிற்றும். வீடு திரும்பாமற் போகவே, பெற்றோர்கள் தேடினர். இரண்டு நாள் கழித்து, கிணற்றில், பிரேதமாகக் கிடைத்தான், 'வருங்கால உலகில்' வாழவேண்டிய சிறுவன். ரூ. 15½க்காக ஒரு கொலை!

*

நேரு பண்டிதர், இலண்டனில் ராணியாரை இந்தியாவுக்கு வருமாறு அழைத்துவிட்டு, அங்கு நடத்தப்பட்ட விருந்துபசாரங்களில் கலந்துகொண்டு, அமெரிக்குப் போயிருக்கிறார்! இங்கே, காமராஜர் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்யும்போது, 'நாடு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பயனுக சுயதேவைப் பூர்த்தியை அடைந்துவிட்டதாகக் கூறுகிறார்!

* * *

ஆந்திர முதலமைச்சர் கோபால ரெட்டியின் ஊருக்கருகே அதிசயம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது! அண்மையில் வாவ்வேரு எனும் ஊரில் நடைபெற்ற பஞ்சாயத்து போர்டு தேர்தலில் வெற்றி பெற்ற அனைவரும் பெண்களே. ஒரு, ஆண்கூடக் கிடையாது. இந்த ஊர், நெல்லூர் மாவட்டத்திலுள்ளது!

*

போலீசு வேலைக்காக அறுபது பெண்களை இம்மாதம் மலேயா சர்க்கார் தேர்ந்தெடுக்க இருக்கிறது. இவர்களுக்குப் புதிய பெண் இன்ஸ்பெக்டர்கள் பயிற்சி அளிப்பார்கள். போலீஸ்காரர்களைப் போலவே, இவர்களும் ரோந்துவருதல் முதலிய பணியாற்றுவார்களாம்! இதற்காக, ஏழு பெண் இன்ஸ்பெக்டர்கள், பயிற்சி அளிக்கப்பட்டு தயாராக இருக்கிறார்கள்.

*

இமயமலையிலுள்ள குமான் பகுதியிலுள்ள ஏரிகளைக் கண்டு பிடித்து, ஆராய்ந்து வருவதற்காக, நான்கு பேர் கொண்ட ஒரு குழு, செல்ல இருக்கிறது. இந்த நான்கு பேரில் ஒருவர் பெண் இமயமலை மீது, முதன் முதலாக ஏறிச்செல்லும், இப்பெண்மணி தென்னாட்டைச் சேர்ந்தவர். டி. என். கிருஷ்ணசாமி என்பவரின் மனைவியாராவார். இந்தக் குழு, ரூப்கந்து எனும் இமயமலைப் பிராந்தியத்தில் காணப்படும் மனித எலும்புக் கூடுகளைப் பற்றியும் ஆராயும்.

*

முன்ஷியார் காலத்தில் கொண்டு வரப்பட்ட 'மரம் நடு விழா'வை இந்த ஆண்டும் கொண்டாட இந்திய சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன்படி எங்கும் நடைபெறும் இந்த விழா. அப்படி நடைபெறுகிறபோது கடந்த ஆண்டு நட்ட 'மரம்' என்னாயிற்றென்று கேட்காமலா இருப்பார்கள், மக்கள்?

*

உடல் வளர்ச்சிக்கும் வலிவுக்கும் 'வைடமின்' பொருள்கள் மிகவும் தேவையல்லவா? அதனால், வல்லுநர்கள் கூடி புதிதாக ஒரு மாத்திரையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதில் ஒரு மாத்திரையைப்போட்டுக்கொண்டால் உடலுக்கு எட்டுவித வைட்டமின் சத்துக்கள் கிடைக்குமாம். இதன் பெயர், **வைக்மின்.**

*

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 15 :: இதழ் 2
15-7-56

மூன்றாண்டாகிறது

"இன்னும் என் வயிறு சரியாகவில்லை. எப்போது பார்த்தாலும், வலிக்கிறது. டாக்டர்களிடம் போனேன். ஏதேதோ மருந்துகளைக் கொடுதது்க் குடிக்கச் சொன்னார்கள். ஒருபலனுமில்லை. வயிற்றை அறுத்துப் பார்த்தால்தான் வியாதியின்னதென்று அறிய முடியும் என்று சொல்லுகிறார்கள், அதற்கும் ஓய்வில்லை, ஆண்டு மூன்றாகிவிட்டது. அவதியோ, பெருகி வருகிறது. கடலூர் சிறை எனக்குத் தந்த பரிசு இது,". என்று இன்று காஞ்சிக்கருகிலுள்ள திருமுக்கூடல் கழகச் செயலாளர், எம்மிடம் வந்து கதறினார். ஆர்வமுள்ள இளைஞர், கழகப்பற்றுமிக்குடையவர். கடந்த 1953 ஜூலை 15-ல் நடைபெற்ற மும்முனைப் போரின் விளைவாக, ஆட்சியாளர் தந்த பரிசு. குலைநோய். அதைக் காட்டி அவர் கண்ணீர் வடித்தபோது, உண்மையில் கலங்கிப்போனோம். அவர் ஒருவர் மட்டுமல்ல, அன்று நடைபெற்ற மும்முனைப் போரில் ஈடுபட்டமைக்காக அகிம்சா ஆட்சியில் பழிவாங்கப்பட்ட பைந்தமிழ் வீரர்கள் பல்லாயிரக் கணக்கில், உளர், ஒவ்வொரு இடத்திலும். காலிழந்தும், உத்யோகமிழந்தும், உறவினர்களின் பாதுகாப்பிழந்தும், "எனினும் என்ன, எமது நாட்டின் விடுதலைக்கு, நானளித்த காணிக்கை", எனும் பெருமிதத்துடன் வீர உலா வரும் வெற்றிச் செல்வர்களை அடிக்கடி காண்கிறோம். அவர்தம் உள்ள உறுதியும், விடுதலைக்காக எதனையும் ஏற்போமென உரைக்கும் எழுச்சிக்குரலும், எம்மைப் பரவசப்படுத்துகிறது. இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?—என்கிற சுந்தரனாரின் வாக்கியம், மனக்கண்முன் களிநடனம் புரிகிறது.

ஜூலை 15—மறக்கொணாத தினம்; நமக்குமட்டுமல்ல, காமராஜருக்குக்கூடத்தான், ஆச்சாரியார் கொணர்டுவந்த கல்வித் திட்டத்துக்கு, கல்லறை எழுப்பிய தினம், அது. அந்நாள் ஏற்படாதிருப்பின், காமராஜர், பீடம் ஏறியிருக்க இயலாது, ஆச்சாரியார் தமது இஷ்டப்படி நாட்டைக் களிநடனக் காடாக்கியிருப்பார். மும்முனைப்போரின் ஒரு நோக்கம், அவரது அலட்சிய தர்பாருக்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான். அதனை முடித்தும் காட்டினோம், முகிழ்த்த புது அரசுக்குத் தலைவரானார், காமராஜர்!! நமக்கெல்லாம் நன்றி தெரிவிப்பதுபோல, "டால்மியாபுரத்தை கல்லக்குடியாகத்தானே மாற்ற வேண்டும், செய்கிறேன். ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டத்தைத்தானே குழிதோண்டிப்புதைக்க வேண்டும். இதோ, செய்கிறேன்!" என்று வலம் வந்தார். அது கண்டு நமது தோழர்களும் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். நாடாள வந்தவர்களெல்லாம் இதுவரையில் நன்றி கொன்றே சென்றனர்—இவர், நல்லவர் — நமது எண்ணத்தை நிறைவேற்றுகிறார்-நாம் தந்த தியாகத்தினை உணர்கிறார்—என்று, நம்மவர் எண்ணினர்.

அப்படிப்பட்டவர், இன்று செல்லுமிடந்தோறும் சொல்லுகிறாராம், "தி. மு. க. நாட்டுக்காக என்ன தியாகம் செய்துவிட்டது? வெறும் பொதுக்கூட்டங்கள் போட்டு, நாடகங்கள் நடத்துவது தவிர, என்ன செய்து விட்டது", என்பதாக.

கல்லக்குடி நடராசன், திருச்சி கேசவன், தூத்துக்குடி உச்சி மாகாளி—கணபதி—சீனிவாசம் பிள்ளை—மந்திர நாடார், ஆறு உயிர்கள், அகிம்சா ஆட்சியின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார்கள், மூன்றாண்டுகளுக்கு முன்பு. அதோ, மணற்பாறையிலே கல்லறையாகிவிட்டான், குமரவேல், திருச்சி சிறையில் ஆறு மாதம் பட்ட அவதியின் விளைவாக. ஆயிரக்கணக்கானோர், தாங்கள் பெற்றதியாகத்தழும்புகளோடு, பேரூர்களிலும் சிற்றூர்களிலும் இருக்கிறார்கள். அவர்களை நினைக்கும்போது நமது, அகமெல்லாம், கலங்குகிறது. திருச்சி மாநாட்டிலே, உடலுறுப் பிழந்த செபாஸ்டியன் வந்து நின்று தான் படும் அவதியைச் சொன்னபோது, அணாக்கள் மூலமே ரூபாய் ஆயிரத்துக்குமேல் அளித்தனர், மக்கள். இவைகளை அறியாதவரல்ல காமராஜர், எனினும் கேட்கிறார், நாட்டுக்காக என்ன செய்துவிட்டார்கள் என்று.

தி. மு. க. நாட்டுக்காக என்ன செய்தது?—என்பதை. 'கல்கி' ஏட்டை எடுத்துப் புரட்டிப் பார்க்கட்டும்—நேரமிருந்தால். நாட்டில் சென்று கேட்டுப் பார்க்கட்டும். தி. மு. க. நாட்டுக்காக, தன்னாலானதைச் செய்யத் தவறியது கிடையாது. நெசவாளர் தம் கண்ணீரைத் துடைக்கத் தலையிலே துணிமூட்டை ஏந்தி, விற்றோம் ஊர்தோறும். கலங்கித் தவித்த தஞ்சை மககளுக்காகப் புயல் நிவாரண நிதி திரட்டி அளித்தோம். கல்விக் கூடங்கள், கல்லூரிகள் முதலியவைகளுக்கு உதவியிருக்கிறோம். சமீபத்

தில் புயலடித்தபோதுகூட, நம்மாலானதைச் செய்திருக்கிறோம். நாடு நலிவதைப் பார்த்துக் கொண்டு, எத்தப் பெரிய மனிதரைப்பிடிக்கலாம் எலெக்ஷனுக்கு எவ்வளவு வேட்டையாடலாம் என்று ஒரு போதும் தி. மு. க. எண்ணியது, கிடையாது.

மக்களின் சிரமத்தைப் போக்க, தான் தொல்லையை மேற்கொண்டிருக்கிறது. அந்த நாள் தான் ஜூலை 15.

5000 தோழர்கள், சிறைவாசம் ஏற்று சிரித்த முகத்துடன் சென்றனர் என்றால் — அந்தச் சிறை வழங்கிய குலை நோயையும் கொடுமையையும் பெற்று உழல்கிறார்கள் எனின் — அது, நாட்டுக்காக. அதனை, மறப்பது, மதோன்மத்தருக்குத்தான், இயலும். ஆட்சிப் பீடத்தைப் பிடித்துக்கொண்ட அன்பர், தேர்தல் நெருங்குகிறதென்றதும், தி. மு. க. என்ன செய்தது எனக் கேட்கிறாராம்.

தி. மு. க. தான் முகிழ்த்த நாளாய், சிந்திய இரத்தம் பெரிது. தூயமனதோடு, நாட்டுக்கு ஆற்றும் நற்பணியின் ஒரு கட்டமாகக் கருதி, பணியாற்றி வருகிறது. அந்தப் பணியின் யின் ஒருஉச்சகட்டம்தான் ஜூலை15.

அக்கிரமம் செய்யப்படின், தட்டிக் கேட்க ஆளில்லை என்று தர்பார் நடாத்திய காங்கிரசுக்கு, 'இதோ, எமக்குப் பதில் கூறும், என்று கேட்டோம். வர்ணாசிரமக் கல்வித் திட்டத்தைப் புகுத்தி, நமது மக்களை அறியாமை இருளில் ஆழ்த்திடச் சதி செய்தோரை, அடக்கிட எழுந்தோம். ஆண்ட பரம்பரையின் தன்மானம் காக்கப் புறப்பட்டோம்! தன் மனம் போன போக்கில், நம்மை இகழ்ந்து பேசிய, ஆசிய ஜோதிக்கு அறிவுரை புகட்டினோம். அக்கிரமம் செய்தார் என்று இதே சர்க்காரால் குற்றக் கூண்டிலே நிறுத்திவைக்கப் பட்டிருக்கும் டால்மியாவின் பெயரால் தண்டமிழ்ச் சோலையில் ஏன் ஒரு ஊர்?-என்று கேட்டோம். இவையனைத்தும், நமது மக்களின் தன்மானத்தைக் காக்கச் செய்யப்பட்ட செயலே ஒழிய வேறல்ல.

நாம் என்ன செய்துவிட்டோம் என்று கேட்கும் காமராஜரை, அவர் என்ன செய்தார் என்று நாட்டு மக்கள் கேட்கும் நிலையில்தானிருக்கிறார்கள்.

தாம் பிறந்த மண்ணுக்குத் தமிழ்நாடு எனும் பெயரையும் வைக்க இயலாத இச்சூரர், தேவிகுளம் பீர் மேட்டைக் கோட்டைவிட்ட தீரர், நம்மைப்பார்த்து இவர்கள் என்ன செய்துவிட்டார்கள் எனக்கேட்கிறார்! அவருக்கும் அவருடைய கட்சிக்கும் பொதுமக்கள பாடம் புகட்டக்கூடிய கட்டம் நெருங்கிக்கொண்டிருக்கிறது — சுருண்டு வீழ்ந்த பிணங்களைக் கண்டு கதறினோரும், தடியடிக்கு ஆளான மக்களும் உறுப்புகளை இழந்து உலவுவோரும், தக்க சமயத்தைத்தான் எதிர்பார்த்துக் கொண்டுள்ளார்கள்

ஜூலை 15 நடந்து மூன்றாண்டுகளாகிவிட்டன.

அந்த நாளை நினைக்கும்போது, அன்று தியாகச் செந்நீர சிந்திய தோழர்களையும், அவர்தம் குடும்பத்தினரையும் காணும்போதும், நமது உள்ளத்தில் ஒருவகை உணர்ச்சி எழத்தான் செய்கிறது. உலக வரலாற்றில், விடுதலைக்காகப் பாடுபட்டவர்களின் பட்டியல் பெரிது — அந்தப் பட்டியலில் நம்முடைய பெயரையும் ஈடுபடுத்திக்கொள்ளும் பாக்கியம் பெற்றோமே, என்கிற பூரிப்புடன் அத்தீரர்களின் திசையை நோக்கி வாழ்த்தையும் வணக்கங்களையும் தெரிவிக்கும் நாளாக இத்தினத்தைக் கருதுகிறோம்.

இந்த ஜூலை 15-ந் தேதி, நமக்காகத் தியாகத் தழும்புகள் பெற்ற வீரர்களுக்கு ஒருமுறை வணக்கம் செலுத்துங்கள். வாழ்க, அவர்தம் நாமம். வளர்க தியாக உணர்ச்சி. என்று, வீரப்பண்பாடுங்கள் —வீணர்களின் கூச்சலுக்கு, அதைவிடத் தக்க பதில், வேறெதுவும் கிடையாது.

★

சுப்பிரமணியத்தின் சோகம்!

வடக்கு வளர்கிறது! தெற்கு தேய்கிறது!!

டில்லியின் அக்கிரமத்தை நாட்டுக்குணர்த்தவும் நமது பூமியை அடகு வைக்கும் காமராஜாகளின் வேடத்தை விளக்கவும், வருகிற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதென்றும் நாம் முடிவு செய்தோம்.

> *"ஐயன்மீர்! நம்மீது ஆசையை, நேருவும் அவருடைய சகாக்களும் வைத்திருப்பது உண்மையானால் அதை வெளிப்படுத்த ஒரு வாய்ப்புத் தருகிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 6000 கோடி ரூபாய் செலவழிக்கப் போகிறார்களாமே, அதில் ஒரு 2000 கோடியை தென்னாட்டுக்கு ஒதுக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம்", என*

பதாக அறிவித்து, எத்தனையோ நாட்களாகிவிட்டன! எவரும், தக்க பதிலளிக்க முன்வரவில்லை. எனினும் செல்லுமிடந்தோறும் நம்மையாளும் காமராஜர் ஒரே பல்லவியைத்தான் பாடுகிறார், "இப்படிப் பேசுவதெல்லாம் தப்பு. இந்தியா பூராவும் ஒண்ணுதானே. முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் வெறும் தேர்தலுக்காக இப்படிப் பேசுகிறார்கள். ஜனங்களே! இதையெல்லாம் நம்பாதீர்கள்", என்று.

அவருடைய கூற்றுக்கு, இதோ பதில் கிடைக்கிறது,

"தொழில் துறையில் தெற்கு, பின்தங்கிக் கிடக்கிறது என்பதில் எவ்வித கருத்து வேற்றுமையும், இருக்க முடியாது."

திட்டவட்டமாகவே தெரிவிக்கிறார், 'இருக்கமுடியாது' என்று. ஏனெனில், அந்தத்துறையில், அவருக்கு, காமராஜரைவிட அதிகம் பயிற்சியும் தொடர்பும் உண்டு. அவர் மேலும் கூறுகிறார்.

"பிரச்சாரத்துக்காக எழுப்பப்படும் கோஷம் அல்ல, அது."

டில்லி, தெற்கை எத்திப் பிழைத்து வாழுகிறது, வஞ்சிக்கப்படுகிறோம் நாம, என்பது பிரச்சாரத்துக்காக எழுப்பப்படும்

(18-ம் பக்கம் பார்க்க)

"பாய்-பாய்"
"சோர்-சோர்"
பாரத் வெளியிடுகள்!

வங்கம் தேசிய எழுச்சிக்குப் பிறப்பிடம் — வெள்ளை ஏகாதிபத்திய ஒழிப்புக்காக வீர இளைஞர்கள் தமது இன்னுயிர் போவது பற்றிய கவலையற்றுப் போராடிய புனிதபூமி.

வெடி குண்டு தயாரிக்கிறார்கள்! ஆயுதக் கிடங்குகளைத் தாக்கிக் கைப்பற்றப் போகிறார்கள்! கவர்னர் மாளிகையைச் சூழ்ந்து கொள்ள இருக்கிறார்கள். வைசிராய் சுட்டுக் கொல்லப்படுவார்! அவர் வர இருக்கும் ஸ்பெஷல் ரயில் கவிழ்க்கப்படும்—என்றெல்லாம் பயங்கரச் செய்திகள் நாடெங்கும் பரவி, பரங்கியருக்குப் பீதியை உண்டாக்கிற்று என்றால், அதற்குக் காரணம், வங்க நாட்டில் பொங்கி எழுந்த தேசியக் கனல் என்னலாம்.

உலகப் புகழ்பெற்ற சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த தாயகம் என்றால், வங்கத்தின் சிறப்புக்கு வேறு விளக்கம் தேவையே இல்லை.

வங்கம், இரு பிரிவுகளாக்கப்பட வேண்டும் என்று வெள்ளை ஆட்சி ஒரு திட்டம் அமுல் செய்தது—சீறிற்று வங்கம் — துண்டாட விடோம் என்று முழக்கமிட்டது. திட்டம் தகர்ந்தது, திருவிழா போலாயிற்று வெற்றி. தீரர் வாழுமிடம் வங்கம் என்ற பெயர் திக்கெட்டும் பரவிற்று. வங்கத்தை வாழ்த்தினர் — கச்சையை வரிந்து கட்டுக! கடல் கடந்து வந்துள்ள பரங்கியரின் கொட்டத்தை ஒழித்துக் கட்டுக! என்று வங்கம் பரணி பாடிற்று — இந்தியாவே போர்க் கோலம் பூண்டது — வாகைசூடி, 'சுதந்திர தேவி'யை வாழ்த்தினர் மக்கள்—ஆனால் வங்கம் வதைக்கப்பட்டது—வங்கம் இரு துண்டுகளாக்கப்பட்டது—வெள்ளையர் முயன்றபோது வெகுண்டெழுந்தது நாடு — இம்முறையோ, காங்கிரசே கத்தி தீட்டிற்று, வங்கம் கழுத்தைக் காட்டிற்று, வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்றாயிற்று.

"தேசியம்" பேசித்தான், வங்கத்தின் மனக்கொதிப்பை அடக்க முடிந்தது. வங்கம், துண்டாடப்பட்டால் என்ன, பாரதம் சுதந்நிரம் பெற்றுவிட்டதன்றோ, அந்தச் சுதந்திரத்தைப் பெறுவதற்காக, வங்கம் இந்தத் தியாகம் புரிந்திடத் தயங்கலாகாது என்று கூறப்பட்டது. வங்கம், அமைதி பெற்றது.

ஆனால் அந்த அமைதி, மேலே மட்டும்தான்! உள்ளூரக் குமுறல் இருந்து வந்தது. ஒவ்வோர் கசப்பு வெளியே கிளம்பும்போதும், தேசீயம் — ஒற்றுமை — என்ற மாய மருந்துகளிட்டனர், மனப்புண் ஆறவில்லை, ஆனால், ஓர் வகையான மயக்கம் தெரிந்தது. அந்த மயக்கத்தை, அமைதி என்று எண்ணிக்கொண்டனர்.

சி. என். ஏ.

உணர்ச்சி வயப்படும எவரும் 'தேசீயம்' எனும் தத்துவத்துக்குக் கட்டுப்படாமலிருக்க இயலாது — எனவே இந்திய துணைக்கண்டத்தில் எங்கெங்கு எவ்வப்பொழுது, உள்ளக் குமுறல் கிளம்பினாலும், 'தேசீயம்' தரப்பட்டது—பலமுறை மருந்து பயன்பட்டது—நோய் நீக்க அல்ல — நோய் கொண்டோனை மயக்கம் கொள்ளச் செய்ய.

வங்கம் மட்டுமல்ல — பல்வேறு பகுதிகளிலும், இந்தப் போக்கு காணக் கிடக்கிறது.

காரணம் என்னெனில், 'பகுதிகள்' என்று குறிப்பிடப்படும் பல பூபாகங்கள், உண்மையிலேயே தனி நாடுகள்—தனி நாடுகளாக இருந்தவை—இருக்கத்தக்கவை—இருந்திட வேண்டும் என்ற ஆர்வத்தைக் கொண்டவைகளேயாகும்.

'பாரதம்' என்றோர் பரந்த இடம், பண்டிதரின் பரிபாலனத்தில் இருக்கிறது-அதன் வடக்கு எல்லை இமயம், தெற்கு எல்லை, குமரி—இடையே ஆயிரத்துக்கு மேற்பட்ட மைல்கள் உள்ளன—என்று கூறிப் பெருமைப் படுவதிலும், அந்தப் பெருமையைக் காரணமாகக்கொண்டு, பாரில் புகழ் பெற வேண்டும் என்பதற்காகவும், பல தேசீய இனங்கள் பலி கொடுக்கப்பட்டிருக்கின்றன!

அருள்பெற, காளிக்கு, ஆட்டுக் குட்டிகளை வெட்டி, இரத்த அபிஷேகம் செய்யும் பக்தன்போல, பண்டிதருக்குப் பரந்ததோர் சாம்ராஜ்யம் இருக்கவேண்டும் என்பதற்காக, வங்கம், மராட்டியம் போன்ற தேசிய இனங்களின் தாயக உரிமை அழிக்கப்பட்டன; அழுகுரலோ, போர் முழக்கமோ எழும்போது "ஜனகணமன" பாடிச் சத்தம் வெளியிலே கேட்காதபடி தடுத்துவிடுகின்றனர்.

"இந்தியா" எங்கணும் இந்நிலை உளது—ஒவ்வோரிடத்தில் நிலைமை, ஒவ்வோர் கட்டத்தில் இருக்கிறது என்று கூறலாம்.

பிரிவினைச் சக்தியொன்று இங்கே வேலை செய்கிறது; இது நாட்டில் ஒற்றுமையைப் பாழ்படுத்தும்; இந்தியா, இந்தியர் என்ற ஏற்புடைய எண்ணத்தைக்

கொள்ளாமல், குறுகிய மாகாணப் பித்தும், மொழிவெறியும் கொண்டு அலைகிறார்கள், ஆர்ப்பரிக்கிறார்கள், இது ஆபத்தானது முளையிலேயே கிள்ளி எறிந்தாகவேண்டும்— என்று பெருந்தலைவர்கள் பேசாத நாளில்லை — இங்ஙனம் பேசாதார், பெருந்தலைவர் என்ற "பெயரும் எடுப்பதில்லை,"

இதிலே, குறிப்பாக, இந்தப் பெருந்தலைவர்கள், சுட்டிக்காட்டிப் பேசுவதும், உபதேசம் தருவதும் தென்னகத்தை, திராவிடத்தைத் தான்.

இங்குள்ளவர்கள், விசித்திரப் பிறவிகள், விஷமக்காரர்கள் என்று கருதிக்கொண்டும், இவர்களுக்குத் 'தேசியம்'—என்பதுபற்றி உணர்ச்சியே கிடையாது என்று எண்ணிக்கொண்டும், ஒற்றுமையைக் குலைப்பதிலும், பிளவும் பேதமும் மூட்டிவிடுவதிலும், கலாம் விளைவிப்பதிலும் தனியானதோர் வெறி உணர்ச்சிகொண்டு அலைவதாகவும் எண்ணிக்கொண்டு, மேலிடத்தில் அமர்ந்துகொண்டவர்கள் ஏளனமாகவும் எரிச்சலுடனும், ஏனோ இவர்கள் இவ்விதமான கெடுமதி கொண்டழிகிறார்கள் என்று இரக்கப்படும் விதமாகவும், பேசுகின்றனர்.

சிறுவர்கள், தீயுடன் விளையாடும்போது, பெரியவர்கள் கண்டு, "சிறுவனே! என்ன காரியம் செய்கிறாய்? நெருப்புடன் விளையாடலாமா?'; என்று கேட்டுப் புத்தி கூறுகிறார்களல்லவா, அதுபோல் பேசுகிறார்கள்,

மேலிடத்தில் இருப்பதினாலேயே, அறிவு மேம்பாடு தங்களிடம் மட்டுமே இருப்பதாக இவர்கள் எண்ணிக்கொள்கின்றனர்,

நாள் தவறாமல், மேலிடத்தமர்ந்துள்ளோர் குறுகிய நோக்கம்—மாகாணப்பித்து— மொழிவெறி—பிளவு மனப்பான்மை—பேதபுத்தி— கலக நோக்கம் — விஷமத்தனம்— விபரீத புத்தி — என்றெல்லாம் பேசிவருவதால், இங்குள்ளவர்களிலே தெளிவற்றவர்களும், தேசியத்தில் கட்டுண்டவர்களும், உண்மைதான்போலும் என்றெண்ணிக் கொள்கின்றனர்—சிலர் மேலிடத்தாருடன் கூடிக்கொண்டு, ஏசவும் செய்கின்றனர்.

மொழி, மாநிலம், இனம், எனும் உணர்ச்சிகளுக்கு இடமளிப்பவர்கள், நாம், மட்டும்தான் என்று பொய்யுரை இவர்கள் கூறுவதால், மேலே, வடக்கே, எவருக்கும் இத்தகைய உணர்ச்சிகளே கிடையாது என்றும், அங்கு அனைவரும் "பாரத புத்திரர்களாகவே" ஒற்றுமையுடன், தோழமை தழைத்திடும் நிலையில் வாழ்ந்து வருவது போலவும், இங்குள்ளோர் சிலர் எண்ணிக்கொள்கின்றனர். ஏமாறுகின்றனர்.

கன்னக்கோல் இருப்பது கண்டு பிடிக்கப்படும் வரையில், காவி கட்டினவனைச் "சாமியார்" என்று தானே நம்பி, வணங்கி வருவர் பாமரர். அரசியலிலும் இதே போக்குத்தான்காணக்கிடக்கிறது.

ஒற்றுமை உபதேசமளிப்போர் அனைவரும் உண்மையிலேயே, தமக்கென்று ஏதும் தேடாதவர், அனைவரையும் தம்மவராகக்கொள்பவர், என்று எண்ணிக்கொள்கிறோம்.

யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று தமிழில் இருப்பதுபோல, ஒற்றுமை பேசும், மேலிடத்தாரின் எந்தச் செம்மொழியிலேனும் உளதா என்பதும் ஐயமே. எனினும், அத்தகைய தமிழகத்துக்குத் தான், 'குருக்ஷேத்திர' பூமியினர், ஒற்றுமை உபதேசமளிக்கின்றனர் அது அவர்தம் தந்திரம் எனில் அதனை இங்குள்ள தமிழரில் சிலர் நம்புகின்றனர் எனில், தமிழரின் தாழ்ச்சியையன்றோ அஃது காட்டுகின்றது.

இந்நிலையில் இருந்து வந்த நம் மக்களுக்கு, அதிர்ச்சியும் அதன் மூலமாக உண்மையை அறிந்திடும் வாய்ப்பும் கிடைத்திடும் வகையிலே, இதுபோது, வடக்கே பல்வேறு இடங்களிலே, நிகழ்ச்சிகள் நடமிடுகின்றன.

பாரதம்! இதிலே ஜாதியும் மதமும், மொழியும் மாகாண எல்லையும், எதுவும் தலைதூக்காது-அனைவரும் பாரத தேச மக்கள் என்பதல்லவா அவர்தம் பதிகம். நாமல்லவா அதனைப் பாழ்படுத்தும் மாபாவிகள் என்று இகழ்ந்து பேசப்பட்டு வருகிறோம்.

'பாரதத்தை' ஒரு கணம் பார்த்திடுவோம் — இந்தப் பிரச்சினைக்காக, என்ன காண்கிறோம்!

மன்னும் இமயமலை
எங்கள் மலையே!
மாநில மீது ஏது
இதற்கு இணையே!

என்று கோகிலவாணி பாடும் கீதம் கேட்கிறது. அந்த இனிய இசையை இருக்குமிடம் தெரியவிடாதபடி ஆக்கிடும் முறையிலே, போர் ஒலி கேட்கிறது—பல்வேறு பகுதிகளில்!

தனிநாடு கேட்கும் நாகர்களின் போர் முழக்கமும், அதனை அழித்திட, டில்லிப் படையினர் கிளப்பும் பீரங்கி முழக்கமும் ஓர் புறம்.

வங்க மொழி பேசும் பகுதிகள் எங்கிருப்பினும், வங்க மாநிலத்துக்கு தந்தாகவேண்டும் என்று வங்கத்தின் பரணி ஓர் புறம்.

பீகார் தன்னிடமுள்ள எந்தப் பகுதியையும் இழந்துவிடச் சம்மதிக்கப் போவதில்லை; எவர் கட்டளையிட்டாலும் தலைசாய்க்கப் போவதில்லை, என்று பரணி மற்றோர் புறம்.

பாஞ்சாலம், சீக்கியரின் பாடிவீடு. இங்கு அவர்கட்கே முதலிடம் இருத்தல் வேண்டும்—இல்லையேல், போர், போர், போர்! என்று சீக்கியரின் சங்கநாதம் ஒரு புறம்.

சீக்கியரின் எதேச்சாதிகாரத்துக்கு இந்துக்களைப் பலியிடாதீர். மகா பஞ்சாப் அமைத்து, மனுமாந்தாதா கால முதல் மகோன்னதமாக வாழ்ந்து வரும் இந்து மார்க்கத்தை இரட்சிப்பீர். இல்லையேல், தர்ம யுத்தம் தொடுத்தேனும், சத்தியத்தை நிலைநாட்டுவோம் என்று துந்துபி முழக்கம் மற்றோர் புறம்.

கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டி, குபேர பட்டினமாக்கினோம் இந்த பம்பாய் நகரை, இது குஜராத்தியிடம்தான் இருக்கவேண்டும், இல்லையேல், வெள்ளியும் தங்கமும் வேறு இடம் செல்லும் என்று குஜராத்திகள் மிரட்டுகிறார்கள்.

பம்பாய், மராட்டியருக்குச் சொந்தம். மராட்டியருக்கு உரிமை பெரிது, உயிரல்ல. பம்பாய் பறிக்கப் பட்டால், அந்தச் செயல் புரியும் தருக்கரின் தலையை எமது

(15-ம் பக்கம் பார்க்க)



காஞ்சீபுரம்

15—7—'56

தம்பி!

—— நாடகமொன்று காணப்போகிறாய் இப்போது—'சுவை தருவதுதான்! கருத்துடன் காண்போர் பயன்பெற முடியும், கண்ணை மட்டுமே பயன்படுத்துவோர் களிப்பு மட்டுமே பெற இயலும். நான் பேசிக்கொண்டே இருக்கிறேனே—அதோ பார் கண்களிலே காதல் ஒளி பூத்திடும் நிலையில் ஓர் கன்னி—பகையும் படையும், பழியும் பரிகாசமும், எது குறுக்கிட்டாலும் அஞ்சாது நின்று, காதலுக்காகத் தன்னை அர்ப்பணித்து விடும் அழகரசி!

"கண்ணாளா! என்னை உம்மிடமிருந்து பிரித்துவிட எவர் என்ன சூழ்ச்சி செய்யினும், வெற்றி பெறப் போவதில்லை. வியர்த்து, விம்மிக் கிடக்கும் இந்த வறியவளா, சீறி எழும் பகைதனைக்கண்டு கலங்காதிருக்கப் போகிறாள்? பெற்றோர் மிரட்டினால் பெரும் பீதி பிறக்கும்! ஊர்ப்பகை கிளம்பிடின் உள்ளம் நடுக்குறும்!! கொற்றம் கோலெடுத்தால் குலை நடுங்கும்! இவளோ இளையவள்—என்ன செய்ய வல்லாள்? என்று எண்ணாதீர்! ஏந்திழையே! என் இதயராணி! தண்ணொளி தந்து தரணிக்கே தனியானதோர் 'தகத்தகாயத்தை'த் தரும் வெண்ணிலவு! அதுபோன்றே ஆரமுதே! உன் அன்பொளி பட்டதும், என் உள்ளமே புதுப் பொலிவு பெறுகிறது என்று அன்றோர் நாள் என்னிடம் கூறினீரே! என்னை வாழ்விக்க வந்த வேந்தே! காதலிக்கவும், அதற்குத் தடை ஏற்பட்டால் உருகிக் கருகிப் போகவும் மட்டுமே என்னால் முடியும் என்று எண்ணாதீர். என் காதலைக் கருக்கிடத் துணிவோரை எதிர்த்து நின்று, வெற்றி பெறும் ஆற்றலும் படைத்தவள் நான்!"

"என் அன்பே! இன்பமே! அன்னமே!......"

"என்றென்றும் இந்த அன்பு மாறாதே, மன்னவா?"

"தேனின் இனிமையும், தென்றலின் குளிர்ச்சியும், பூத்துக்குலுங்கும் மலரின் கவர்ச்சியும் மாறுமோ, மைவிழியாளே!"

"ஏனோ எனைப் பெற்றோர் நமைப் பிரித்திடும் பேய்க்குணம் கொண்டோராயினர்! வானத்து வெண்ணிலவைப் பறித்தெடுத்து சதுப்பு நிலத்திலே ஆழப் புதைத்துவிட எண்ணுவதா, அறிவு!!"

"காதலின் வலிவு, எத்தகையது என்பதை அவர்கள் காண விரும்புகின்றனர் போலும்"

"கட்டாரியை என் மார்பில் பாய்ச்சிடும்போது, குபுகுபு வெனப் பொங்கி எழும் குருதியும், என் அரசே! உமது திருநாமத்தைத்தான் ஒலிக்கும்......"

"கொத்தும் கழுகையும் துரத்தி விட்டு, கோல மயிலே! நான் பிணமாகிப்போன நிலையிலிருந்தும், மீண்டெழுந்து வந்து,

★ உழைப்பே செல்வம்!

உன் பக்கம் நிற்பேன், ஒரு கணம் காண்பேன், ஓவென் றலறி வீழ்வேன் — உன்னை அணைத்தபடி உயிர் துறப் பேன்"

தம்பி! போதும், இந்தப் பக்கம், பார்.

நாடகக் கொட்டகையில் காணும் இந்தக் காதற்காட்சியைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டே காலத்தை ஓட்டிவிடுவதற்கில்லை; காரியமாற்றவேண்டும் நிரம்ப; காதல் மட்டும்தான் உனக்குள்ள வேலை என்று எண்ணிக்கொண்டு, இன்னும் என்ன? மேலால் என்ன? காதல் கைகூடிற்றா? கட்டழகி கடிமணம் புரிந்து கொண்டாளா, அல்லது காதகர் வெற்றிபெறக் கண்டு, கட்டாரிக்கு இரையானளா என்பது அறிய மற்றக் காட்சி களுக்காக ஏங்கித் தவிக்காதே. நாடகக் கொட்டகையை விட்டு எழுந்துவா, போவோம்! காலையில் வேறோர் காட்சி காணவேண்டும்!

"பயிர்களுக்குப் பூச்சித் தொல்லை ஏற்படாதிருப்பதற் காக, எடுத்துக்கொள்ளப்பட் டுள்ள முயற்சி பாராட்டத் தக்கதுதான்; ஆனால் செல வினத்தைப் பார்க்கும்போது, சங்கடமாக இருக்கிறது. மக் களின் அடிப்படைத்தேவைக் கான துறையிலே எவ்வளவு பெரும் பொருள் செலவிடு வதும் தவறல்லதான், எனி னும் பயன் கெடாத முறையில் செலவின் அளவைக் குறைத் திட முடியுமா என்பதுபற்றி நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்."

"பூச்சிகள் முழுவதையும் ஒழித்திடாமல், பாதி அளவு மட்டும் ஒழித்திடலாம் என் பது, அம்மையாரின், வாதமோ!"

"அப்பாவியும் அப்படிக் கூறுனே! அன்புக்கே உறை விடமான தாய்க்குலத்தவ ளான, நானு அதுபோல் எண்ணுவேன். பரிகாசம் பேசும் தோழர், சிறிதளவு பொறுப்புணர்ச்சியைக்காட்டி நான் கூறும் பிரச்சினைக்கு விளக்கம் தர வேண்டு கிறேன்."

"பெரும்பொருள் செலவா வது உண்மைதான்! ஆனால் பயிரை நாசம் செய்யும் பூச்சி களைக் கொன்றெழிக்க இந் தப் பொருள் தேவைப் படுகிறது."

"பூச்சிகளை ஒழித்திட, இப் போது நாம் தெளிக்கும் மருந்து வகையின் உற்பத்திச் செலவை, மேலும் குறைத்திட நமது விஞ்ஞானிகளிடம் யோசனை கேட்கப்பட்டதா?"

"இந்த யோசனை நிச்சயம் கவனிக்கப்படும்."

"நன்றி! விரைவில் கவ னிக்க வேண்டுகிறேன்."

என்ன தம்பி! இப்படிப் பார்க் கிறாய்? பகட்டுடையின்றி, எளிய தோற்றத்துடன், குழுவில் அமர்ந்து, உழவுமுறை, விஞ்ஞான வளம், பொருளாதாரப் பிரச்சினை குறித்தெல்லாம், தெளிவும் கனி வும் காட்டிப் பேசிடும், இந்தக் காரிகை யார்? எங்கோ பார்த்த முகம்போலிருக்கிறதே. என்று ஆச்சரியப் படுகிறாய் அல்லவா! உனக்கேன் தொல்லை, நான் கூறி விடுகிறேன். இதோ நாட்டு ஆட்சிமுறைக் குழுவில் அமர்ந்து பணியாற்றும் இந்த நாரீமணிதான், நேற்றிரவு, நாடக மேடையில் கண் களிலே நீர்துளிர்க்க, கேட்போர் மெய்சிலிர்க்கும் விதமாகப் பேசி நடித்த நங்கை. முன்னாள் இரவு நடிகை! இங்கு, ஆட்சி மன்ற அலுவலில் ஈடுபட்டுள்ள மாதரசி!

தம்பி, நீயும் நானும், சீன சென்றால், கற்பனைபோல் தோன்றும் இந்தக் காட்சி யில் காணப்படும், காரி கையைச் சந்திக்கலாம்!!

டியன் ஹுவா என்றோர் நடிகை, சீனநாட்டில் பெரும் புகழ்பெற்று விளங்கி வருவ துடன், தேசீய மக்கள் காங் கிரசில் உறுப்பினராகவும் அமர்ந்து அரும்பணியாற்று கிறார்.

நாடகத் துறையிலும் படக் காட்சித் துறையிலும் ஈடுபட்டு, கலைஞர்களின் நன் மதிப்பையும் மக்களின் பேராதரவையும் காணிக்கையாகப் பெற்றுத் திக ழும் டியான் ஹுவா நாட்டாட்சிப் பிரச்சினையிலும் ஆர்வம் காட்டுவ துடன், ஆட்சிப் பிரச்சினையைக் கவனிக்கும் மன்றத்திலமர்ந்து அரும்பணியாற்றுகிறார்-இன்றைய சீனாவில்—செஞ்சீனாவில்.

வயது 27! வசீகரமான தோற் றம்! கலைத்திறம் வளமாக இருக் கிறது! நாடகமேடையில் 'நவரசம்' சொட்டச் சொட்ட நடித்து மக்களை மகிழ்விக்கிறார். ஆட்சி மன்றக் குழுவில் காலையில் அமர்ந்து அரும் பணியாற்றுகிறார்.

புன்னகையும் பெருமூச்சும், பொறிபறக்கப் பேசுவதும், புலம்பி நிற்பதும், தேன்மொழி பேசுவதும், திகைப்புண்டு நிற் பதும், தாபத்தை வெளியிடுவதும், தத்தளிப்பைக் காட்டுவதும், நாடக மேடையில்! ஆய்வுரை நடத்து வதும் ஆதாரங்கள் காட்டுவதும், புள்ளி விவரம் கேட்பதும் பிரச் சினைகளை அலசுவதும் மன்றத் திலே.

நாடகமாடும் நாரிமணிதானே, நயனத்தின் மூலம், நானுவிதமான உணர்ச்சிகளை எடுத்துக் காட்ட, நெளிய, குழைய, பூவிதழ் விரித் திட, பூங்கொடிபோலாட, கலைந் திடும் கூந்தலையும், நெகிழ்ந்திடும் ஆடையையும், வளைகுலுங்கிடும் கரத்தால் சரி செய்து காட்ட, இய லுமேயன்றி, மக்கள் சார்பாகப் பேச, பணி புரிய, திட்டங்களை ஆராய, கருத்துரை தர, எங்ஙனம் இயலும், என்று, சீன நாட்டிலே கேட்கவில்லை.

சாய உதட்டுக்காரி, சல்லாபப் பேச்சுக்காரி, — சட்டம் இயற்றும் இடத்திலே ஏன் இருந்திட வேண் டும் என்று கேட்கக் காணோம்.

இங்கு—காமராஜர் கேட்கிறார் — அவர் கேட்கிறாரே நாமும் அதே 'பாணியில்' பேசியாக வேண்டுமே- (ஒப்பந்தத்தை மீறலாமா!!) என்று எண்ணிக்கொண்ட நிலையில் வேறு சிலரும் கேட்கிறார்கள், நாடகமாடி கள் நாடாள்வதா! என்று.

உலகுக்கோர் புதுமை, என்று கொண்டாடப்படும் சீனுவில், நாடகமாடும் நாரீமணி நாட்டாட்சிக் குழுவிலும் அமர்ந்திட முடிகிறது! உலகத் தலைவர்கள் வரிசையில் இடம் பெற்றுத் திகழும் சோ-இன்-லாய், அந்த 'நடிப்புச் செல்வி'யைப் பாராட்டுகிருர் என்று நாளிதழ்கள் கூறுகின்றன.

தம்பி! நாம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவு செய்தவுடன், நம்மீது வீசப்படும் கணைகள் பலப்பல!! கலை உலகினர் நம் கழகத்தில் உள்ளனர் என்பதால் ஏற்பட்ட காய்ச்சல், கசப்பாக மாறி, இப்போது கடு விஷம் கக்குகின்றனர், உள்ளம் வெதும்பிய நிலையில் உள்ளவர்கள்.

நாடகமாடுவோருக்கும் நாட்டாட்சிப் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்கின்றனர்.

நாடகமாடுவோர், நாட்டாட்சி மன்றத் தேர்தல்களில் ஈடுபடக்கூடாது என்று கண்டித்துப் பேசுவோர், தத்தமது தரத்துக்கு ஏற்ப ஏசுகின்றனர். நமது கழகத்தில் ஈடுபடுவதால் கலைஞர்களுக்கு ஏற்படும் பல தொல்லைகளிலே ஒன்று, இந்தத் தாக்குதல், எனினும் அவர்கள் கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கைகொண்டவர்கள். ஆகையால் இந்த இழிமொழிகளைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை.

சீன நாட்டு நடிகை பற்றிய கட்டுரை காண நேரிட்டது; களிப்பும் நம்பிக்கையும் பிறந்தது. நாடகமாடிகள் நாடாள்வதா என்று நையாண்டி செய்வோர், இதைக் கண்டு திருந்துவார்கள், என்ற நம்பிக்கையில் இதை எழுதவில்லை! அவர்கள் நாடகமாடுவோர்மீதா கோபப்பட்டுள்ளனர் —தங்களிடம் இல்லையே, என்பதல்லவா, அவர்கட்கு உள்ள கோபம்!

நாடகமாடிகட்கு நாட்டாட்சியில் என்ன வேலை என்று, இன்று கேட்கும் இவர்கள், நாம் நாடகமாடிய போது, ஏதும் ஏசாதிருந்தனரோ எனில், இல்லை, இல்லை, இழிமொழி வாணிபம் அப்போதும் நடாத்தி வந்தனர்.

நாடாளும் முறை குறித்து மக்களைப் பக்குவப்படுத்த, பொது வாழ்வுத் துறையில் ஈடுபடுவோர் நாடகமாடுவதா' என்ன கேவலம், எத்துணை அக்ரமம்! வானமே! இடிந்து வீழாயோ!! பூமியே! பிளந்து விழுங்காயோ!! ஆடை அணிகளே! அரவமாகி அவர்களைக் கடித்துச் சாகடிக்காயோ!— என்றெல்லாம் அலறித் துடித்து அழுதனர்.

தம்பி, நான் படித்த சீன நாடு பற்றிய கட்டுரையில் காண்கிறேன், மேனுட்டு ராஜதந்திரிகளும் கண்டு வியந்திடத்தக்க திறன்படைத்த **சோ-இன்-லாய்** நாடகம் காண்பதில் பேரார்வம் கொண்டவராம்— அது மட்டுமல்ல, அவருக்கே நடிப்பதில் மெத்த விருப்பமாம்—பல முறை நாடகமாடியும் இருக்கிருராம்!

> **எந்தப் பாதை?**
>
> "காந்தியார் காட்டிய இலட்சியப் பாதையல்ல, நாம் சென்றுகொண்டிருப்பது. அவர் எப்படி நம்முடைய சமுதாயம் அமையவேண்டுமென்று சொல்லி வந்தாரோ, அந்தச் சமுதாயமல்ல நாம் அமைத்துக்கொண்டிருப்பது."
>
> —பிரசாத். ஐதராபாத் ஜூலை 8,

சீறிடும் ஏறுகள் அங்கு கிளம்பி, நாடகமாடி நாடாள்வதா? என்று கேட்கக்காணேம்! இது குறித்து நான் எண்ணிக்கொண்டிருக்கும் போது, தம்பி, இன்றைய தபாலில் கிடைத்தது மற்ருேர் தகவல்.

வெண்புரு வட்டமிட்டுச் செல்கிறது, வானத்தில் — வடிவழகன் அதைக் கண்டு வியக்கிருன்!

புரு திடீரென்று ஆபத்தினின்றும் தப்ப, திசைமாறிச் செல்கிறது—இளவலின் கண்களுக்குத் தெரியவில்லை.

எங்கே என் புரு? சிறகடித்துச் சிங்காரமாகப் பறந்த என் வண்ணப் புரு எங்கே? என்று தேடி அலைகிருன் குமரன்.

"கொஞ்சும் புருவே
நெஞ்சோடு நெஞ்சம்
உறவாடிட
வாராததேனே"

என்று இசைபாடி, வெண்புருவைக் கொஞ்சுகிருள், கண்டாரைக் கொல்லும் ஓர் கட்டழகி.

அவன் வருகிருன், அவள் பார்க்கிருள்!!

அம்புவிழி தொடுக்கிருள், வம்பு வந்து சேருகிறது!

தம்பி! சாரங்கதரா நாடகம்.

இதிலே சித்திராங்கி பாத்திரம், காவி உடையோனையும் கரையச் செய்யும் என்பார்கள்.

இந்தச் 'சித்திராங்கி' வேடத்தை அருமையாகத் தாங்கி நடித்தவராம், ஆந்திர நாட்டுத் தலைவர், பிரகாசம்!!

இந்த ருசிகரமான சேதியை 'சோஷலிஸ்டு' இதழில் காண்கிறேன்; இதோ அது; படித்துப்பார், தம்பி, பகை கக்குவதுதான் பழைய தொடர்புக்கு இலட்சணம் என்று எண்ணிக் கொண்டிருப்போருக்கும் காட்டு, பார்க்கச் சம்மதித்தால்.

> "தி. மு. கவின் பேரில் காமராஜ சுமத்துகிற குற்றச்சாட்டு மிகவும் விநோதமானது. "அவர்கள் நாடகமாடுவோர்கள், நாடாள்வதாவது" என்று கேட்கிருர். இருந்திருந்து பிடித்தாலும் புளியங்காம்பைப் பிடிக்க வேண்டும் என்னும் கதையாக ஒரு அருமையான 'பாயிண்டைக்' காமராஜர் பிடித்திருக்கிருர். இதற்காக அவரைப் பாராட்டவே வேண்டும்.
>
> இந்த நாடகமாடுவோரைப் பற்றி அபேதவாதிக்கு ஒரு சில சம்பவங்கள் தெரியும்.
>
> ஆந்திர நாட்டில் ஒரு மகாராஜா இருந்தார். அவர் கலைப் பிரியர். அவர் முன்னல் ஒரு சில இளைஞர்கள் சேர்ந்து சாரங்கதரா நாடகம் நடத்திக் கொண்டிருந்தனராம். அதில் சித்திராங்கி வேஷம் தரித்து ஒரு இளைஞன் அற்புதமாக நடித்தானும். அந்த இளைஞன் பேரில் மகாராஜாவுக்கு அபார பிரியம் ஏற்பட்டு, அந்த இளைஞனின் படிப்பு எல்லாவற்றையும் தானே கவனித்துக்கொண்டாராம்.

இந்த இளைஞர்தான் இன்றைக்கு ஆசியாவிலேயேயாகு மதிர்ந்த அரசியல்வாதியாகத் திகழ்ந்துவரும் ஆந்திரகேசரி தங்கத்தூரு — பிரகாசம் பந்துலுகாரு அவர்கள். அவர் நாடகமாடியவர். அதனுல் தானு சென்னை முதன் மந்திரி பதவியிலேயிருந்து அவரை விரட்டினுர் காமராஜர்?

அவ்வளவிற்குப் போவானேன்? காமராஜர் என்கிற பெயரை உலகுக்கறிவித்து அவரை அரசியல் வாதியாக்கி விட்ட பெருமை வாய்ந்தவர் ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள்.

சத்தியமூர்த்திக்கு நல்ல சங்கீதம், நாடகம் இவற்றில் அபார பிரியம், கே. பி. சுந்தராம்பாள், எஸ். ஜி. கிட்டப்பா ஆகியோர் அவருக்கு அத்யந்த நண்பர்கள். இது மட்டுமல்ல. அவரே சில தடவைகளில் அரிதாரம் முத்து வெள்ளை தடவிக்கொண்டு நாடகம் நடித்துள்ளார்.

காமராசருக்கு இவ்விஷயத்திலும் சந்தேகமிருந்தால் 'தீரர் சத்தியமூர்த்தி' என்று பத்து வருடத்திற்கு முன்னுல் ஒரு புஸ்தகம் வந்துள்ளது. அதில் வேஷம் போட்டபடியே இருக்கும் சத்தியமூர்த்தியின் படமும் வந்துள்ளது. தயவு செய்து அதையாவது பார்த்துக் கொள்ளட்டும்.''

தேர்தலில் நாம் ஈடுபடத் தீர்மானித்ததும், திகில்கொண்டோரும் பொருமை கொண்டோரும், மக்களிடம், நம்மைப்பற்றிக் கேவலமான முறையில் இழித்தும் பழித்தும் பேசுவதன் மூலம், நமக்குப் பெருந்தோல்வியை ஏற்படுத்தலாம் என்று எண்ணிக் கொள்கின்றனர்.

வெற்றிபெற்ருகவேண்டும்என்ற வெறிபிடித்தும் நாம் அலையவில்லை, தோல்வி ஏற்பட்டு விடுமோ என்று 'தொடைநடுக்கமும்' நாம்கொண்டில்லை; இதனை வசவாளர்கள் உணர்ந்து கொள்ளும் நிலையிலும் இல்லை.

பதவியைச் சுவைத்துக் கொண்டு, அந்த இனிப்பில் சொக்கி, புதிய 'பவிசு' கண்டு பல்லிளிப்போரின் பராக்குப் பெற்றுப் பூரித்துக் கிடப்போருக்கு, தேர்தல் வருகிறது என்றதும், திகில் பிறக்கத்தான் வேண்டும், மீண்டும் இதே சுவை கிடைக்குமா, அல்லது தட்டிப் பறித்துக்கொள்வரோ, என்றெல்லாம் ஏக்கம் பிறக்கும்.

கவர்னர் கைலாகு கொடுக்க, கலெக்டர் கட்டியங்கூற, பிரமுகர்கள் பராக்குக்கூற, அதிகாரிகள் ஆலவட்டம் சுற்ற, கல்லூரிகள் கனிவுகாட்ட, கட்டிடங்கள் கண் சிமிட்ட, பவனி நடத்துகிருேமே— இது மறுபடியும் கிடைக்குமா, அல்லது பால் தராத பசுவுக்கு 'தரும விடுதி வாசம்' கிடைப்பது போல, பயன்கெட்ட பொருள் பரணைக்குச் செல்வதுபோல, நாமும் கேட்பாரற்றுப் போய்விட நேரிடுமா என்ற கவலை அவர்கட்கு ஏற்படவேண்டும். அந்த அச்சமும்கவலையும் அவர்களை ஆலாய்ப் பறக்கவைக்கிறது, ஆருடம் கேட்கச் செய்கிறது, ஆதரவு பெறுவதற்கு யாரரிடம் ஐயா! அப்பா! என்று கெஞ்சவேண்டும், எவரெவருக்கு என்னென்ன அச்சாரம் தர வேண்டும், என்றெல்லாம் சிந்திக்க வைக்கிறது; நமக்கென்ன நடுக்கம் தம்பி! "மயிலுக்குக் கண்ணிவைத்தேன் மாமன் மகளே! குயில்வந்து விழுந்தது பார், கொண்டேனடி பெண்ணே" என்று வயலோரத்தில் பாடுவார்கள் தம்பி, அது போலப் பாடிவிட்டுப் போவோம், கவலை என்ன!!

தேர்தலிலா நிற்கிறீர்கள்? கூத்தாடிகளே! நீங்களா தேர்தலில் ஈடுபடுகிறீர்கள்? என்று, ஏதோ நையாண்டி செய்வதுபோலப் பேசுகிருர்களே தவிர, உள்ளூர அவர்கட்கு நடுக்கம்; நாம் எப்படிப்பட்ட பலசாலிகளோ என்பது கூட அல்ல அவர்கட்குப் பிரச்சினை, "எப்படிப்பட்ட தவறுகளெல்லாம் செய்து தொலைத்துவிட்டிருக்கிருேம்; எத்தனை வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டோம்; எத்தனைவிதமான ஊழல், ஊதாரித்தனம் வெடிக்கின்றன. மக்களின் வாழ்விலே எத்தனை எத்தனை இடிகள், அதிர்ச்சிகள் ஏற

நீங்கள் படித்துவிட்டீர்களா?

புத்தம் புதிய நூல்

சி. என். ஏ. தீட்டிய

நாட்டின் நாயகர்கள்

விலை அணு எட்டு

வியாபாரிகளுக்கு 25% கழிவு. தனிப்பிரதி வேண்டுவோர் போதிய தபால் தலைகள் அனுப்புக.

பரிமளம் பதிப்பகம்,
காஞ்சீபுரம்.

பட்டுவிட்டன; எவ்வளவு அடக்கு முறையை அவிழ்த்துவிட்டுவிட்டோம்; இவைகளுக்கெல்லாம், மக்கள், பாடம்புகட்டக் காத்துக் கொண்டிருக்கிறார்களே; இந்தப் பாவிகள் பிரச்சினைகளைப் புட்டுப் புட்டுக் காட்டுகிறார்களே; வடநாடு கொழுக்கிறது, தென்னாடு தேய்கிறது என்பதற்கு ஆதாரம் தருகிறார்கள், புள்ளிவிவரம் காட்டுகிறார்கள், பாடல்கள் தருகிறார்கள் படம் போட்டுக் காட்டுகிறார்கள், நாடகமே ஆட முடிகிறது; அத்துடன் விடாமல், நம்மவர்களே அவ்வப்போது பேசுவதிலிருந்தே, வடநாட்டு ஆதிக்கம் இருப்பது விளங்கிவிட்டது கேளீர் என்று எடுத்துக் காட்டுகிறார்கள்; உரிமையைப் பாதுகாத்திட முடிந்ததா? வாழ்வில் வளம் கிடைத்திடச் செய்யமுடிந்ததா? என்று கேட்கிறார்கள்! தேவிகுளம் பீர்மேடு பகுதிகளை இழந்துவிட்டு இளித்த வாயரானார்கள், இந்த இலட்சணத்தில் இவர்களுக்கு வாய்மட்டும் இருக்கிறது காதுவரையில் என்று கேலி செய்கிறார்கள். சித்தூர் திருத்தணி எங்கே? என்று கேட்கிறார்கள்; நிலச் சீர்திருத்தச் சட்டம் என்னகதியாயிற்று என்று இடித்துக் காட்டுகிறார்கள்; செச்செச்சே! பெரிய தலைவலியாகிவிட்டது; வாயை அடக்கலாம் என்றாலோ, எவ்விதமான அடக்குமுறைக்கும் தயார் என்கிறார்கள்; இந்த நிலையில் தேர்தல் வருகிறதே என்ன ஆகுமோ, ஏது நேரிடுமோ, என்று அவர்களுக்கு அச்சம், நிச்சயமாக!

தேர்தல் வரட்டும், ஒரு கை பார்த்தே விடுகிறோம் என்று பேசுகிறார்களல்லவா, சென்ற தடவை இவர்களின் கதி என்ன ஆயிற்று தெரியுமோ! மறந்துவிட்டார்கள், மகானுபாவர்கள்! மக்கள் மறக்கவில்லை! மண்ணைக் கவ்வினார்கள், மாபெருந் தலைவர்களெல்லாம்! மண்டைக் கனம்கொண்டு பேசுகிறார்களோ என்று எண்ணிக் கொள்ளாதே தம்பி, பழைய சம்பவம் நினைவிற்கு வந்ததால், மருட்சி அடைந்து பேசும் பேச்சு அது, ஒரு கை பார்த்துவிடுவோம் என்பது!

அவர்களுக்கு நினைவிலில்லாமற் போகும், தம்பி, ஒன்று உனக்குக் கவனத்திலிருக்கட்டும் — சென்ற பொதுத் தேர்தலில் பெருந் தலைவர்கள் பலர் பிடரியில் கால்பட ஓடினர்; சிலர் கொல்லைப்புற வழியாக நுழைந்துகொண்டு கொலுவிருக்கின்றனர்: வேறு சிலர் 'வனவாசம்' சென்றுவிட்டனர்; ஆனால் அனைவரும் அல்லல் எவ்வளவு படவேண்டுமோ, பல்லைக் காட்டி எவ்வளவு கெஞ்ச வேண்டுமோ அவ்வளவும் நடந்தேறிற்று; அவ்வளவுக்குப் பிறகும், மொத்தத்தில் கணக்குப் பார்க்கும்போது, **காங்கிரசுக்குக் கிடைத்ததைவிட, காங்கிரசல்லாதாருக்குத்தான் மக்களின் ஓட்டு அதிக அளவு கிடைத்தது.** ஆனால் இடதுசாரிக் கட்சிகள் என்பவைகளுக்குள் ஒரு கூட்டு எண்ணம் ஏற்படமுடியாமல் போய்விட்டது; அதனால் காங்கிரஸ் இங்கு ஆட்சியில் அமர முடிந்ததே தவிர, மக்கள் விரும்பி அழைத்ததால் அல்ல, ஆதரவு அளித்ததால் அல்ல. காங்கிரசிடம் நம்பிக்கையில்லை என்பதைத்தான், கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் தெளிவாக எடுத்துக் காட்டினர்!

மூக்கறுபட்டும், முகத்தில் கரி பூசிக்கொண்டும், முக்காடிட்டும் மூலையில் சென்றும், பலர் பதுங்கினர்.

என்னமோ, நின்ற முன்னூறு இடங்களிலும் இவர்கள் முன்பு வெற்றி பெற்றுவிட்டதுபோலவும், இன்றைய தேர்தலில் அது போலவே, எங்கும் 'ஜெய பேரிகை' கொட்டப்போவது போலவும், முழக்கிக்கொண்டு வருகிறார்களே தவிர, உண்மையை மக்கள் மறந்துவிடவில்லை; சென்ற தேர்தலின் போதே, காங்கிரசிடம் நம்பிக்கை இல்லை என்பதுதான் அறிவிக்கப்பட்டுவிட்டது!

வலையை வைத்தும் வலை வீசியும், வழியே நின்று குழைந்தும் வாசனை பூசியும், 'இரவல்களை' இழுத்துக் கொண்டு, இவர்களின் ஆட்சி அமைக்கப்பட்டதே தவிர, பெருவாரியாக வெற்றி பெற்றதால் அல்ல! வெட்கித் தலைகுனிந்து, வியர்த்து வெடவெடத்துக் கிடந்தனர் அந்த நாட்களில், இப்போது ஏதோ வீரப்புப் பேசுகிறார்கள் — ஒரு கை பார்ப்போம் என்கிறார்கள்! கை வண்ணம் கண்டோமே முன் போர்முறை!

ஆகவே, தம்பி, தூய உள்ளத்துடனும், முடிவுபற்றிய கவலையற்றும், நாம் இந்தத் தேர்தலில் ஈடுபடுகிறோம்.

மக்களிடம் சென்று கூறுவோம்'
இந்த ஆட்சி
நம்பினோரை நட்டாற்றில் விட்டுவிட்டது.

நலிந்தோரைக் காப்பாற்றத் தவறிவிட்டது.

நேருவின் புகழொளியைக் காட்டுகிறதே தவிர, மக்களின் வாழ்விலே ஒளி இல்லை.

முதலாளிமார்களின் முகாமாகிவிட்டது!

பேசுவது 'ஆவடி', கிடப்பதோ முதலாளியின் காலடி!!

வளமெல்லாம், தொழிலெல்லாம் வடக்கே; வறுமை நெளிவது தெற்கே, என்ற முறையில் ஆட்சித் திட்டம் அமைந்து கிடக்கிறது, எனவே இது அடிமைகளின் கூடாரமாகி விட்டது. இதனை சென்ற கிழமை நிதி அமைச்சரே, தூத்துக்குடியில் பேசியுமிருக்கிருர்.

தமிழருக்கு உரிய தேவிகுளம்; பீர்மேடு பறிக்கப்பட்டு விட்டது; தமிழ் இனத்துக்குத் துரோகம் செய்து கொண்டு நடத்தப்படும் துரைத்தனம் இது.

வடக்கெல்லைப் பிரச்சினைக்கு இன்று வரை நியாயம் காண முடியாமல், திண்டாடுகிறது இந்தத் துரைத்தனம்.

தம்பி! இந்த அவலட்சணம் அனைத்தும், அம்பலமாகி, இல்லமெல்லாம், இதயமெல்லாம் உண்மை சென்று தங்கிட வேண்டும், நமது தேர்தல் நோக்கம், 'இது தான், இதிலே நமக்கு, 'நாடகம்' கருவியாகிறது; எனவே தான் நாடகமாடிகளா!! என்று ஏசுகிருர்கள்; ஏசட்டும்!

உலகில் பல்வேறு இடங்களிலே அமுலில் இருக்கும், முற்போக்குத் திட்டங்களை, மக்கள் மன்றத்தில் எடுத்துரைப்போம்.

எத்தகைய முற்போக்குத் திட்டத்துக்கும் இடமளிக்காத போக்கிலே, இவர்களின் ஆட்சிமுறை இருப்பதை எடுத்துக் காட்டுவோம்.

ஏழெட்டு ஆண்டுகளாக இவர்களின் ஆட்சியிலே யார் இலாபம் பெற்ருர்கள், எவருடைய கரம் வலுத்தது என்பதை எடுத்துக் கூறுவோம்.

இல்லாமையால் ஏழை மக்கள் இடர்ப்படுகிருர்களே, அதனை உலகறியச் செய்வோம்.

இலண்டனிலும் பாரிசிலும், நேருவுக்குப் பழரசம் தருகிருர்களே, அதேபோது, இலங்கையில் தமிழரின் இரத்தத்தைக் குடிக்கும ஓர் கொடிய ஆட்சி நடக்கிறதே, கேட்டவர் யார்? ஏன் உள்ளம் துடிக்கவில்லை? உணர்வு ஏன் பிறக்கவில்லை? என்று கேட்போம்; ஓட்டுக் கேட்கக் காங்கிரசார் வருகிற இடமெல்லாம், இரத்தக்கறையைக் கழுவினீர்களா? என்று மக்கள் இவர்களைக் கேட்கப்போகிருர்கள்.

எனவே, தம்பி! நண்பர்களுடன் கலந்து பேசி நமது தேர்தல் பிரச்சார முறைபற்றிய திட்டம் வகுத்துக்கொண்டு, தலைமைக் கழகத்துக்கும் தெரியப்படுத்து.

அண்ணு! எல்லாம் சரி! பணம்?- என்றுதானே கேட்கிருய்.

பணத்துக்கு என்னடா தம்பி, குறை! கள்ளங்கபடமற்ற உள்ளம் படைத்த உன் ஒரு சொட்டு வியர்வை, ஓராயிரம் ரூபாய்க்குச் சமமாயிற்றே! இலட்சியத்திலே அசைக்கொணுத நம்பிக்கை கொண்டுள்ள உன் ஒருசொல், ஒரு சொற்பொழிவல்லவா! உன்னிடம் உள்ள 'திறமை' பயன்பட்டால் போதும், பேழையை நம்பியே தேர்தலில் ஈடுபடுவோரின் எதிர்ப்பு நம்மை ஏதும் செய்துவிடாது!

தம்பி, இன்றிலிருந்து தேர்தலுக்காக இது என்று, நீ, ஒதுக்கி வைக்க வேண்டும், சேமித்து வைக்க வேண்டும்; உன் வாழ்க்கைக்காகச் செலவிடப்படும் தொகையிலே ஓர் பகுதியை!

வீட்டுக்கு வீடு, வேளைக்கு வேளை ஒரு பிடி அரிசி! கேலியல்ல! உன் காணிக்கை அதுவாக இருக்கும் என்ருல் மகிழ்கிறேன், பெருமைப்படுகிறேன், சேமித்துவை.

செலவாகும் ஒவ்வோர் ரூபாயிலும் ஒரு அணு — தேர்தல் செலவுக்கு என்று எடுத்துவை! இன்றே துவக்கு, இனிதே, வெற்றி கிடைக்கும்.

பதின்மர், இருபதின்மர் கூடிடும் போதும், அதனைப் பயனுள்ள கூட்டமாக்கிக்கொண்டு காங்கிரசாட்சியின் கேடுகள் குறித்த தகவல்களை எடுத்துக் கூறு.

வசதி கிடைக்கும்போதெல்லாம். துண்டு வெளியீடுகள் பரப்பு!

எவர் செவியிலும், நமது கொள்கை புகவேண்டும்!

அங்காடியை மறவாதே,' அறநெறியினின்றும் பிறழாதே.

ஆர்வத்தைக் குறைத்துக் கொள்ளாதே, ஆத்திரத்துக்கு இடமளித்துவிடாதே!

ஏசினுல், கோபம்கொள்ளாதே— எவர் இதயத்திலும் நமது நோக்கம் சென்று தங்கவேண்டும்— கோபம் நம்மைக் குறுக்குவழி இழுத்துச்சென்றுவிடும்.

தலைமைக் கழகம், விரைவில் தேர்தல் திட்டம் பற்றிய விளக்கம் அளிக்கும்.

அதுவரையில் செயலற்று இருக்கவேண்டும் என்பதல்ல, தலைமைக் கழகம் எவ்வகையில் திட்டங்கள் தீட்டவேண்டும் என்பதற்கான கருத்தினை வழங்க வேண்டுகிறேன்.

கோடீஸ்வரர்களும் இலட்சாதிபதிகளும், ஆலை அரசர்களும் வணிகக்கோமான்களும், நிலப் பிரபுக்களும் வட்டிக்கடை வேந்தர்களும், காங்கிரஸ் சார்பில் தேர்தலில் ஈடுபட்டு, பணத்தை வாரி வாரி இறைக்கப் போகிருர்கள்— தெரிகிறது! — எனினும் எனக்கு இருக்கும் தைரியத்துக்குக் காரணம், நம்மிடம் உள்ள செல்வம் சாமான்யமானதல்ல என்ற எண்ணம்தான்! வைரம் பாய்ந்த நெஞ்சமல்லவா உனக்கு, தங்கக் குணம் படைத்த தம்பி! ஊரை அடித்து உலையில்போடும் உலுத்தர்களை முறியடிக்க, உன் உழைப்பும் எழுச்சியும் போதும்! **உழைப்பே செல்வம் என்பது உலகறிந்த உண்மையல்லவா?**

அன்பன்,

அண்ணாதுரை

"கொன்று விட்டார்! கொன்று விட்டார்!!"

"என்ன ஓய்! யாரை, யார் கொன்றது?"

"இந்த நாஸ்தீகர்களை, ஒரேயடியில், நம்ம ராஜாஜி தீர்த்துக்கட்டி விட்டார்..."

"என்ன ஓய் உளர்றீர்! நம்ம ராஜாஜி என்ன நரசிம்மாவதாரம் எடுத்தாரா? அல்லது அணுகுண்டைத் தயாரித்து அவர்கள் மீது வீசினாரா? ஒரே ஆனந்தத்துடன் கூவுகிறீரே! என்ன விஷயம்?"

"அதெல்லாம் ஏன்! அருமையான உபதேசம் ஒன்று போதாதா? தக்கர் பாபா வித்யாலத்தில் பேசக் கூப்பிட்டிருந்தார்கள். போனார். ஒரு பிடி பிடித்தார், நாஸ்தீகர்களை. அதோடு, ஜனங்களுக்கும் அறிவுரை வழங்கினார்..."

"என்ன அறிவுரை ஓய்!"

"ஆண்டவனிடம் உண்மையான பக்தி செலுத்தினால் அவன் உங்கள் வீட்டை நாய் மாதிரி காவல் காப்பான்; திருடன் உள்ளே புகாமல் தடுப்பான். உங்கள் வாழ்க்கையும் நன்றாக அமையும்! எப்படி உபதேசம்?"

"காதுக்கு இனிக்கிறது! ஆனால்..."

"ஆனால் என்ன ஓய்! இந்த நாஸ்தீகாளிடம், இதை எடுத்து வீசினால், அப்படியே நடுநடுங்கிப் போய்விட மாட்டார்களா. அப்படி ஏதேனும் வாதாட வந்தாலும், முதலில் அவர் சொல்லியது போல செஞ்சு பாருமேய்யா!—என்று சொல்லி மடக்கிட மாட்டோம், நாம்..."

"ஓய்! உமக்கு ஏன்தான் இப்படிப் புத்திப் போறதோ?"

"ஏன் ஓய்! என் புத்திக்கு என்ன குறைச்சலாம். பாரும், இந்த உபதேசத்தைச் சொல்லி, கழகத்து கார்மேகத்தை ஒரு மடக்கு மடக்குகிறேன்..."

"அதோ, அவன் கூட வருகிறான்.."

*   *

"என்ன கார்மேகம்! சௌக்கியமா? உங்க கழகம் எல்லாம் எப்படியிருக்கிறது."

"ஏது, சாஸ்திரிகளுக்குக்கூட கழகத்தின்மீது அக்கரை பிறந்திருக்கிறது..."

"ஏம்பா, எங்களுக்கு மட்டும் அக்கரை பிறக்காதா என்ன? நீங்க மட்டும் இந்தக் கடவுளைப் பற்றிப் பேசறதை விட்டு விட்டேளன்னா, நாளைக்கே நாங்களெல்லாம் உங்க

ளோடே சேர்ந்துண்டு இந்த நேருஜி பண்றதையெல்லாம் எடுத்துச் சொல்லமாட்டோம்னா நினைக்கிறே..........."

"கடவுளைப் பற்றிப் பேசினா, உங்களுக்கு மட்டும் ஏன் சுவாமிகளே, கோபம் பொத்துக்கொண்டு வரணும்?"

"நேக்குமட்டும் என்ன கவலை என்கிறையோ! எல்லாம் நம்ம தேசம் சுபீட்சமா, எல்லாரும் சுகமாயிருக்கணும்கிறதுதான்."

"அதுக்கு...?"

"நமம ராஜாஜி சொல்லியிருக்காரே படிச்சயோ நீ? நீயா, படிக்காமலிருப்பே! தக்கர்பாபா பள்ளிக்கூடத்திலே மே 24-ந் தேதி பேசினதைத்தான் சொல்றேன்..."

"ஆண்டவனிடம் பக்தி செலுத்தினால் அவன் உங்கள் வீட்டை நாய் மாதிரி காவல் காப்பான்; திருடன் உள்ளே புகாமல் தடுப்பான் என்றாரே, அதுவா!

"ஆமாமாம்! அப்படிச் செஞ்சா என்னா? பெரியவா, சொல்றதைத்தான் கொஞ்சம் அனுசரிச்சு நடந்து பார்ப்போமே!"

"அது சரி, சாஸ்திரிகளே! இவ்வளவு பேசறாரே ஆச்சாரியார், இவர் இராத்திரிக்குத்தூங்கப் போகும்போது, வீட்டுக் கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போடாம இருக்கிறாரோ?...ஏன் விழிக்கிறீர்!.........இல்லை, ஆண்டவனிடம் பக்தியைச் செலுத்தும் எல்லோரும் அப்படி நடக்கிறீர்களோ?"

"மனமாயை யாரை விடுது, கார்மேகம். அது அகலனும்னுதானே அனுதினமும் முயற்சிக்கிறோம..."

"ஆமாமய்யா! உபதேசம் பிறருக்கு மட்டும் செய்வது. அதைக் கேட்டு எங்க ஆசாமிகள், என்ன கதிக்கு ஆளாகிறாங்கன்னு உமக்குத் தெரியுமா......உதாரணத்துக்கு ஒரு சேதியைத் தருகிறேன். இப்படியெல்லாம் ஆச்சாரியார் பேச, நீங்கள்ளாம் எடுத்துப் பரப்ப, அதைக் கேட்கும் எங்க அண்ணாத்தை ஒருவர் வீட்டில் நிகழ்ந்தது இது...நாகர்கோயிலுக்கு அருகில் கடுக்கரையென்று ஒரு ஊர். அங்கே, கணபதி என்ற ஒரு சிறுவனை நல்லபாம்பொன்று கடித்தது. உடனே டாக்டரிடம்தானே கொண்டு போயிருக்க வேண்டும்? அவர்களுக்குத்தான் உங்களைப்போன்றோர் ஊட்டிய போதை தலைக்குமேல் ஏறியிருக்கிறதே! அதனால் பக்கத்திலிருந்த ஐயப்பன் கோயிலுக்குப் பையனைத் தூக்கிக்கொண்டு போனார்கள். மந்திரிக்கச் சொன்னார்கள். விபூதியை வாங்கிப் பூசினார்கள். சரி, இனிமேல் பிழைத்துக்கொள்வான், என்று வீட்டுக்குக் கொண்டுபோயினர்..."

"பையன் பிழைத்துக்கொண்டானா?"

"எப்படிப் பிழைப்பான்! கொஞ்ச நேரத்துக்கெல்லாம், உடம்பு சில்லிட்டுப் போகவே, டாக்டரிடம் தூக்கிக் கொண்டு ஓடியிருக்கின்றனர்."

"டாக்டர், என்ன சொன்னார்?"

"உடம்பைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, பையனை சில மணி நேரத்துக்கு முன்பே கொண்டு வந்திருக்கக்கூடாதா. இறந்து எவ்வளவோ நேரமாகிவிட்டதே........ என்றார்."

"ஐயோ; பாபம்! அவன் தலையெழுத்து முடிந்துவிட்டது. யார்தான் என்ன செய்ய முடியும்?"

"ஆமய்யா! இப்போது, தலையெழுத்தும் விதியும் வருகிறது உமது வாயில். கொஞ்ச நேரத்துக்கு முன்பு. ஆண்டவன் நாய்மாதிரி காவல் காப்பான்; திருடன் வராமல் தடுப்பான் என்றீர்...ஆமாம், நமக்கு எத்தனை கடவுள்கள்?"

"மூலவர் மூவர், முப்பத்துமுக் கோடி தேவர்கள். பத்து அவதாரங்கள்......"

"போதும், போதும்! இவ்வளவு பேர் இருந்தும், ஏன் வெள்ளைக்காரன் இந்த நாட்டுக்குள் வராமல் தடுக்கமுடியவில்லை...? சொல்லுமே, பதில்! நீர், எப்படிச் சொல்லமுடியும் ......ஆச்சாரியார் பேசியதும் ஆனந்தத்தோடு வாயை அடக்கவந்தீரே, ஓய்வாக, இந்தச் சேதியைப் படித்துப் பாரும்......உங்கள் சங்கராச்சாரிகள், மடாதிபதிகள், ஆண்டவனை நம்பிக்கொண்டா இருக்கிறார்கள்? அல்லது, நம்முடைய தலைவிதி அவ்வளவுதான் எனறு கருதுகிறார்கள் — என்பது புரியும்.........நான் வருகிறேன்!"

*

"என்ன ஓய்! இப்போது என்ன சொல்லுகிறீர்......"

"அவன் சொல்வதிலும் நியாயம் இருக்கத்தானிருக்கிறது"

"ஆமாம்! அவன் கொடுத்த சேதியைப் படியும்......"

"மடங்களுக்குள் பிரவேசிக்க அதிகாரிகளுக்கு அதிகாரமளித்தும், அறநிலைய கமிஷனரின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்பட்டு மடாதிபதிகள் சில செலவுகள் செய்யவேண்டுமென்றும், மடங்களில் மிஞ்சும் உபரி நிதியைப் பயன்படுத்த கோர்ட்டுமூலம் நடவடிக்கை எடுக்க கமிஷனருக்கு அதிகாரம் அளித்தும், **நிதிகளை ஏழைகளுக்கும் வறுமையிலுள்ள மத ஸ்தாபனங்களுக்கும்** பயன்படுத்தவும், சர்க்கார் கொண்டுவந்திருக்கும் சட்டம் தங்களுடைய ஜீவாதார உரிமைகளைப் பறிப்பதாக, சங்கராச்சாரியாரும் வேறு சில பத்து மடாதிபதிகளும் சேர்ந்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிருர்கள்..."

"சங்கராச்சாரியார்கூடவா?,

"ஆமாம், ஓய், ஆமாம்!,,

"பின் கார்மேகம் ஏன் ஓய், பேசமாட்டான், ராஜாஜி' ஆண்டவனிடம் உண்மையான பக்தியைச் செலுத்தினுல், யாருக்கும் அஞ்சவேண்டாம் என்கிருர். அப்படிச் சொல்பவரால் கூட, சொன்னபடி நடக்கமுடிகிறதா, என்று கேட்டான்' கார்மேகம். அதுதான் போகட்டுமென்ருல், ராஜாஜியும் நாமும் எல்லோரும் போய்க் கும்பிடும் சங்கராச்சாரியார் கூடகோர்ட்டுக்கல்லவா போகிருராம், ஆண்டவன் மீது பாரத்தைப் போடாமல்!"

"அதனுல்தான், கார்மேகம் கன ஜோராகக்கேட்டான் 'ஏனய்யா! நீங்க சொல்றதைக் கேட்டு எங்க அண்ணுத்தைகள் மட்டும் ஏமாற வேண்டும். நீங்கள் உபதேசிப்பீர்களே ஒழிய, உங்களுக்கு தொந்தரவுஎன்ருல் உபதேசம்எல்லாம் பஞ்சாய் பறந்துவிடும் என்று!"

"ஓய்! ஓய்!! நேக்குகூட், கழக வாடை அடித்திடுமோன்னு பயமாயிருக்கு ஓய்..."

"அடித்திடுமோ என்னு! நான், முழுக்க முழுக்க அவாளை நம்பறதுன்னு முடிவு செஞ்சு மூணு நாளாச்சே!" ★

"பிஸ்மார்க்" ஆகாதீர்!

"பண்பும் பெருமையும் நிறைந்த தமிழ்மொழி, சிங்கள மொழி, கலை, கலாசாரத்திற்கு மட்டுமின்றி இன்னும் எத்தனையோ உலகமொழிகள், கலைகள், கலாசாரங்களுக்கு உயிர் கொடுத்திருக்கிறது; இன்றும் உயிர் அளித்துக்கொண்டிருக்கிறது, ஆனுல் தற்போது சில சிஙகளத் தலைவர்கள் அந்நிய ஆட்சிக்கு முன்னர் சிங்கள மொழி அரசியல் மொழியாக இருந்ததென்று கூறுவது பெரும விந்தையேயாகும். இராதரட்சதர் என்னும் முற்காலச் சிங்களத் தலைமை அமைச்சர் தமிழ் மொழியில் உறுதிமொழி கூறியுள்ளார் என்பதை வரலாறு கூறுகிறது என்பதை இவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இதை எண்ணிப் பார்க்காமல் ஆட்சியில் இருக்கவேண்டும் என்ற காரணத்தால் சிங்களத்தை அரசியல் மொழி ஆக்கிவிட்டு பொருளற்ற விரிவுரைகளும் கூறத் தொடங்கியுள்ளனர்.

சிங்களத்தை மட்டும் அரசியல் மொழியாக்குவதற்கு இலங்கை உணவு அமைச்சர் அளிக்கும் வியாக்கியானம் விந்தைக்குரியதாக உள்ளது. 25 சிறு சிறு இனங்கள் வாழக்கூடிய அமெரிக்காவில் ஒரு மொழிதான் அரசியல் மொழியாக இருக்கிறது என்று அவர் கூறியுள்ளார், ஆனுல் 4 சதவீதம் இத்தாலியரும 22 சதவீதம் பிரெஞ்சுக்காரரும் வாழும் சுவிட்சர்லாந்தில் இத்தாலியும் பிரெஞ்சுமொழியும் சமநிலை பெற்றுள்ளன. பெல்ஜியததில் பிரெஞ்சும், பிலமின் மொழியும் சமநிலை பெற்றிருக்கின்றன. மற்றும் 21 கோடி மக்கள் வாழும் சோவியத் ருசியாவில் 14 மொழிகளும், அண்டைநாடான பாகிஸ்தானில் உருதுமொழியும், வங்காளமொழியும் 1 கோடி, 14 லட்சம் மக்கள் உள்ள தென் ஆப்பிரிக்காவில் ஆங்கிலமும், ஆப்பிரிக்க மொழியும் சமநிலை பெற்றுருக்கின்றன. இந்நிலையில் மொழிச் சமத்துவம் வழங்குவதில் பெரும்பான்மை, சிறுபான்மை என்னும் பொருளற்ற சிக்கல்கள் எழவேண்டிய அவசியமே இல்லை. மனச்சாட்சிகளுக்கு விரோதமான மசோதாக்களை நிறைவேற்றிவிட்டு அதனுல் ஏற்படும் கெட்ட பெயரை அகற்றிக்கொள்ளக் கூச்சல்போடுவது மனிதப் பண்பிற்கு முரணுன செயலாகும்"

திரிகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆசிரியர்கள் கூட்டத்தில் பேசுகையில் தனிநாயக அடிகள் இவ்வாறு கூறினுர். இக் கூட்டத்திற்குத் திரு. எஸ். அம்பலவாணர் தலைமை வகித்தார்.

*

இலங்கை சிங்களமொழி அரசியல் மொழியாக்கப்பட்டது குறித்து இலங்கைப் பொது பொதுவுடைமைத் தலைவர்களில் ஒருவரும் பாராளுமன்ற உருபபினருமான திரு. பீட்டர்கெனமென் கூறியதாவது:—

இலங்கை அரசாங்கத்திற்கு, செர்மனி நாட்டில பிஸ்மாக்குக்கு நேர்ந்த கதியை நினைவூட்ட நான் விரும்புகிறேன். அவர் செர்மன் மொழியை மட்டும் அரசியல் மொழியாக்குவதன் மூலம் போலந்து மக்களையும், அவர்களது மொழியையும் நசுக்கப் பார்த்தார். ஆனுல் இறுதியில் நடந்ததென்ன? செர்மன மொழியும், போலந்து மொழியும் அழிந்துவிடவில்லை. பிஸ்மார்க்கும் அவரைப் பின்பற்றியவர்களும் இருந்த இடம தெரியாது மறைந்துவிட்டார்கள்"

6-ம் பக்கத் தொடர்ச்சி

கால் சும்மா விடாது. தாயகம் காண மனைதொறும் ஓர் மகன் கிளம்புவான், மராட்டியம் போர்க் கோலம் கொண்டுவிட்டது, மமதையாளர்களே, விலகி நில்லுங்கள், இல்லையேல் வெட்டி வீழ்த்துவோம் உமது ஆணவத்தை. என்று மராட்டியர் ஓர் புறம் மார்தட்டிக் கூறுகின்றனர்.

இந்தக் கிளர்ச்சிகளின் தன்மைகள், இவைகளிலே நியாயம் எவர் பக்கம் என்பன பற்றி எண்ணுவதற்கு முன்பு, இத்தகைய கிளர்ச்சிகள் ஒரே போது, எத்துணை வேகமாகக் கிளம்பியுள்ளன—ஒற்றுமை உபதேசிகளின் கண்பார்வையிலும் ஆட்சியிலும் இருக்கும் இடத்திலே எரிச்சலூட்டும் கிளர்ச்சிகள் ஏற்பட்ட விந்தைக்குக் காரணம் என்ன என்பது பற்றியே எண்ணிப் பார்த்திடவேண்டும்.

மொழி—இனம் — எனும் வெறி கொண்டலைபவர்கள், நாம் என்றனரே, இப்போது அங்கே நிலைமை என்ன என்று கேட்க வேண்டுமல்லவா?

பிளவு மனப்பான்மை, பேத புத்தி, குறுகிய நோக்கம் — என்ற கெடுமதி அனைத்தும் குடிகொண்ட கொடியவர்கள் நாம் என்று ஏசினரே, இன்று, வங்கமும் பாஞ்சாலமும், மராட்டியமும் என்ன கோலம் காட்டி நிற்கின்றன? ஏன் இக்காட்சி எழுந்தது? என்பது பற்றிக் கேட்டிட வேண்டாமா?

மராட்டியருக்கு மராட்டிய மண்டலம் தருகிறார்கள்.

மொழி அடிப்படையிலேயே அது அமைகிறது.

எனினும், மராட்டியர் மிகப் பெரும்பான்மையினராக உள்ள பம்பாய் நகர் எப்படி மராட்டியருக்கு இல்லை என்று கூறலாம்? ஏன் இந்த அநீதி? எப்படிப் பிறந்தது இந்தத் துணிவு?—என்று கேட்டு, மராட்டியர் போர் தொடுத்துள்ளனர்.

மாஸ்கோ சென்றவர், பீகிங் பார்த்தவர், பாண்டுங்கில் பேசியவர், பாரிஸ் செல்பவர், நியுயார்க் நண்பர், இலண்டன் நேசர், முடிசூடா மன்னர், ஆசியாவின் ஜோதி —இவரைப் பார்த்தாவது, கோபம் குறைமின், கிளர்ச்சியை நிறுத்துமின், என்று கூறினர்—இவரைப் பார்க்கும்போது தான் எமது ஆத்திரம் பன்மடங்கு அதிகமாகிறது என்று கூறி, ஆயிரக்கணக்கில் மராட்டியர் கிளம்பி, அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கொட்டகையை முற்றுகையிட்டனர்.

ஏன் இந்த நிலைமை? என்ன ஆயிற்று, "ஜனகணமன!"

தனக்கு வந்தால்தான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும் என்பார்கள்.

அவரவர்களுக்கு, தமது உடைமையும் உரிமையும் பிறரால் பறிக்கப்படுகிறபோதுதான், ஆர்வம் ஆத்திர அளவுக்குப் பீறிட்டுக் கொண்டு வருகிறது.

தேசியம்—பாரதம் — என்பவைகள், அந்த ஆத்திரத்தைத் தணிக்கும் மாமருந்தாகவில்லை.

தேசியம் பேசலாம் பாரதம் பற்றிப் பண்பாடலாம், ஆனால் அதற்காகப் பம்பாயை இழப்பதா! முடியாது! என்று மாராட்டியர் முழக்கமிடுகின்றனர்! தேசிய கீதம் கேட்டறியாத மக்களா மாரட்டியர்!

பத்தாயிரம் மக்கள் திரண்டனர், தூறலைப் பொருட்படுத்தவில்லை, கருப்புக் கொடிகளை ஏந்திக் கொண்டு, பீகார் சட்டசபை கூடுமிடத்துக்குச் சென்றனர்.

பீகார் பகுதிகளை வங்கத்துக்குத் தர மாட்டோம்.

மத்ய சர்க்கார் தீர்ப்பு அக்ரமமானது அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

என்றெல்லாம் முழக்கமிட்டனர். உள்ளே, சட்டசபை விவாதித்துக் கொண்டிருக்கிறது வெளியே மக்கள் முழக்கமிடுகிறார்கள்.

முதலமைச்சரைக் காண வேண்டும்!

வெளியே வரச்சொல்லுங்கள் முதலமைச்சரை!

என்று மக்கள் குரல் கொடுக்கிறார்கள்.

காமராஜராக இருந்தால், "இந்த உதவாக்கரைகளின் ஊளையைக் கேட்க, நான் ஏன் வெளியே வரவேண்டும்? என், மலபார் போலீஸ் போகட்டும்" என்று கூறிவிட்டு, வெல்வெட்டு மெத்தையில் சாய்ந்துவிட்டிருப்பார்; பீகார் முதலமைச்சர் கிருஷ்ணசின்கா வெளியே வந்தார், மக்களின் பேரார்வத்தைக் கண்டு பெருமிதம் கொண்டார், பாராட்டினார், பத்து நிமிடங்கள் பேசவும் செய்தார்.

பீகார் முதலமைச்சர் என்ன பேசினார்? "குளமாவது மேடாவது, எங்கே இருந்தால் என்ன? ஏன் கத்துகிறீர்கள். எல்லாம் இந்தியாவிலேயேதானே இருக்கு! யார் தூக்கிக்கொண்டு போயிட்டாங்க! போங்க, போங்க" என்று காமராஜ் பேசுகிறாரே, அப்படியா? இல்லை, பீகாரிகளே! உங்கள் ஆர்வத்தை மெச்சுகிறேன், உரிமை உணர்ச்சியை மதிக்கிறேன்—என்றார்.

ஆத்திரப்படாதீர்கள், நாட்டுக்குக் கேடான செயலில் ஈடுபடாதீர்கள் என்ற அறிவுரை கூறாமலில்லை; கூறிவிட்டு, பீகாரின் உரிமையை இழக்கப்போவதில்லை, என்று வாக்களித்தார். இங்கேயும் அமைச்சர்கள் வாக்களித்தார்கள் —மக்களிடம். மக்களிடம்தானே, என்ற எண்ணத்தில், காற்றிலே பறக்கவிட்டுவிட்டு, 'கனம்' ஆகவே கொலுவிருக்கிறார்கள்.

பீகாரின் சில பகுதிகளை, வங்கத்துடன் சேர்த்துவிட, மத்திய சர்க்கார் தீர்மானித்திருப்பது கண்டு, மனக் கொதிப்பு ஏற்பட்டிருப்பதை நான் உணருகிறேன். இதற்குப் பரிகாரம் காண்பேன்; காணத் தவறினல், ஐந்து நிமிடம் கூடத் தாமதிக்கமாட்டேன், பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க மாட்டேன், விலகிவிடுவேன்! என்று கூறினார்.

பத்தாயிரம்பேர், சென்னை சட்டசபை முன்பு நின்று உரிமை முழக்கமிட்டால், பத்துப் பிணமாவது கீழேவிழும்! பத்திரிகைகள் அவ்வளவும் ஐயோ! பாவம்! பத்துப்பேர் சுட்டுக் கொல்லப்பட்டனரே என்று பச்சாதாபப்பட்டுக் கூட எழுத முன்வாரா; மாறாக பாவிகள் சிலபேர், சட்டசபை வாயிலை, இரத்தத்தால் அழுக்காக்கிவிட்டார்கள்! என்று கண்டித்தே எழுதுவார்கள்!

பீகார் முதலமைச்சர், இத்தகைய உரிமை முழக்கத்திக்கு மதிப்

பளித்து, மக்களின் மனக்குறையை போக்குவதாக வாக்களித்து இயலாது போயின் பதவியிலிருந்து விலகுவேன் என்றும் சூளுரைத்து மக்களாட்சியின் மாண்பினை விளக்கினார்; அர்மட்டோ, மக்கள் உரிமை முழக்கமிட்டது. என் கரத்தை வலுவாக்கி விட்டது, என்ற அரசியல் சூட்சுமும் தெரிவித்தார்; மத்ய சர்க்காரிடம் நான் நியாயம் கேட்கும்போது, மக்களின் மனநிலை இதுபோல் உளது எனபதை எடுத்துக் காட்டுவதற்கு இந்த அணிவகுப்பும் உரிமை முழக்கமும் பயன்படுத்தப்படும் எனபதைச் சுட்டிக் காட்டினார். சுடலையின் அமைதி தேவை என்கிறார் காமராஜர், தமது ஆட்சியில்.

இத்தனைக்கும், அணிவகுப்பு நடத்தி, சட்டசபை முன் சென்று, உரிமை முழக்கமிட்டு, முதலமைச்சரை வெளியேவரச்சொல்லி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள், எதிர்க்கட்சிக்காரர்கள்!! K. S. பாஜீ என்பார் எதிர்க்கட்சித் தலைவர்; அவரே இந்த அணிவகுப்பினை முன்னின்று நடத்தினர்

பீகார் முழுவதும் பீகாரிக்கே, என்று பேசுகின்றனர், பித்தர்கள், 'ஜன கண மன' பாடு, கேட்டோடிப் போகட்டும்; அதனால் பயனில்லையானல், குதிரைப் பட்டாளத்தை ஏவு, துரத்தி அடிப்பார்கள்—என்ற முறையிலே துரைத்தனம் நடததவில்லை. உரிமை உணர்ச்சி கொள்வது நியாயம் என்று ஆட்சி ஏற்றுககொண்டது, தேசியம்—பாரத ஐக்யம்—என்று பேசிக்கொண்டே, பீகாரிக்குச் சொந்தமான பகுதியை வங்கத்துக்கு எடுத்துத் தருவது, நியாயமல்ல என்று திட்டவட்டமாகக் கூறுகிறது அநீதி அனுமதிக்கப்படமாட்டாது என்று வாக்களிக்கிறது.

பீகாரிக்கும் வங்காளிக்கும் என்னவித்தியாசம்? இருவரும் "ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா!!" — தான்! இருவரும், 'இந்தியைச் சொந்தம் கொண்டாடுபவர்களே! எனினும், பீகாரி என்றும் வங்காளி என்றும் உணர்வு இருக்கிறது, மடிந்துவிடவில்லை; எல்லை கேட்கவும், அதிலே நியாயம் காணவும் உணர்ச்சி எழுகிறது, அதனை ஓராயிரம் முறை 'ஜன கண மன' பாடியும், இல்லாமற் போகச் செய்யவில்லை.

பீகாரிலிருந்து துண்டித்து வங்கத்துடன் இணைக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது, 3200 சதுரமைல் பூபாகமாகும்.

எங்கே இருந்தால் என்ன? என்று கேட்டுவிட்டு, ஏமாளியாக மறுக்கிறது பீகார்.

வங்கம், வாளாயில்லை, வங்கம், தனக்குக் கிடைக்க வேண்டியது முழுவதும் கிடைக்கவில்லை என்று கடுங் கோபம் கொண்டிருக்கிறது; கிளர்ச்சி அங்கே பேருருவெடுத்துளது.

வங்க மொழி பேசுவோர் பெருவாரியாக உள்ள, தொடர்பான பகுதி, வங்கத்துடன்தான் இருந்தாக வேண்டும் என்று, வலியுறுத்துகிறது.

வங்க சட்டசபைக் கூட்டம் நடைபெற்றபோதும், "ஆர்ப்பாட்டம்" 'உரிமை முழக்கம்' நடைபெற்றது.

உள்ளே, முதலமைச்சர் டாக்டர் ராய், வங்கத்தின் உரிமைக்காக வாதாடிக்கொண்டிருக்கையில், போராடியேனும் உரிமையை நிலை நாட்டுவோம் என்று வெளியே மக்கள் முழக்கமிட்டனர்.

மத்திய சர்க்கார், பூகோளம் தெரியாமல், வங்க நாட்டு வரலாறு அறியாமல், பொருளாதாரச் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளாமல், தவறான முடிவுக்கு வந்துவிட்டது; நாம் அறிவு கொளுத்துவோம், உரிமையைப் பெறுவோம, என்று டாக்டர் ராய் பேசினர்.

மத்ய சர்க்கார் மேலும் 363 சதுர மைல், பீகாரிலிருந்து எடுத்து வங்கத்துக்குத் தரவேண்டும் என்று கணக்குக் கூறுகிறார்.

ரயில்களை நிறுத்தினர்; பஸ்கள் ஓடவில்லை; தொழிற்சாலைகள் மூடிக் கிடந்தன; அலுவலகங்கள் பணியாற்றவில்லை; மாணவர்கள் பள்ளிகளில் இல்லை; மகத்தான வேலை நிறுத்தம் நடத்தினர், உரிமைக்கிளர்ச்சியினர், கல்கத்தாவில்.

2000 பேர் கைது செய்யப்பட்டனர்; **11** மணி நேரம் நடைபெற்ற அர்த்தாலின் போது.

பீகாரில், மீண்டும் வாளாயிருந்துவிடவில்லை.

பீகார் பகுதிகளை வங்கத்துக்கு எடுத்தளிக்கும் திட்டத்தை, பீகார் சட்டசபை நிராகரித்துவிட்டது.

மக்களென்ன, குப்பை கூளமா, எந்தப்பக்கம் வேண்டுமானாலும் கொண்டுபோய்ச் சேர்க்க.

மக்களின் சம்மதம் கேளாமல், அவர்களை ஒரு ஆளுகையிலிருந்து மற்றோர் ஆட்சிக்குத் துரத்துவது ஜனநாயகமாகுமா?

காங்கிரஸ் மந்திரிசபை, இந்தத் திட்டத்தை எதிர்த்து ராஜிநாமாச் செய்ய விரும்புகிறது என்பதை நான் காங்கிரஸ் மேலிடத்துக்கு எடுத்துரைப்பேன்.

பீகார் முதலமைச்சர் இவ்விதமெல்லாம் பேசுகிறார் மத்யசர்க்காரின் திட்டத்தைத் தூக்கி எறிந்து விட்டார்.

பீகார்—வங்கம் — இவ்விரண்டினுக்கிடையில், இந்த அளவுக்குக் கசப்பு வளருகிறது; இரு இடங்களிலும், எந்தப் பகுதி எவருடைய ஆட்சியிலே இருந்தாலென்ன, அனைவரும் இந்தியர்தானே, என்ற பேச்சுக்கு மதிப்பும் காணோம், பயனும் இல்லை.

பீகார் பீகாரிக்கே! வங்கம் வங்காளிக்கே!! என்பது தத்துவமாக, திட்டமாகப் பேசபபடவில்லையே தவிர, நிலையும் நினைப்பும் அதுதான்.

வேடிக்கை இதிலே என்னவென்றால், இந்த இரு இடங்களைத்தான், இந்திய ஒற்றுமைக்கு, தேசீயத்துக்கு, தன்னலமற்ற விரிந்த மனப்பான்மைக்கு, ராஜதந்திரத்துக்கு அரசியல் விவேகத்துக்கு, எடுத்துக்காட்டாக, சில திங்களுக்கு முன்பு பாராட்டி உரைத்தனர்.

மாகாணப் பித்து இல்லை! குறுகிய மனப்போக்கு இல்லை. எல்லை பற்றிய தொல்லை இல்லை, எல்லோரும் பாரததேச மக்களே என்ற சிலாக்கியமான கொள்கைக்கு வங்கமும், பீகாரும், மற்ற இடங்கட்கெல்லாம் வழி காட்டுகின்றன என்று புகழ்ந்துரைத்தனர்.

வங்க முதலமைச்சரும், பீகார் முதலமைச்சரும் **"பாய் பாய்"** (சகோதரர்கள்) என்றனர், பாரதப் பண்பாடு பாரீர், பாரீர், என்று பண்டிதர் பூரித்துக் கூறினர்.

வங்கமும் பீகாரும் ஒன்றாக இணைந்து, ஓரரசு ஆகும் என்று. இரு முதலமைச்சர்களும் அறிவித்தனர்.

களிநடம் புரிந்தனர் நாடெங்கும் தலைவர்கள்; புதியதோர் பொற்காலம் உதயமாகிறது என்றனர் அரசியல் ஆரூடக்காரர்.

வங்கமும் பீகாரும் வேறு வேறு அரசுகளாக இருப்பது அர்த்தமற்றது

அநாகரீகமானது, அரசியல் பொருளாதார நலனுக்கு ஊறு செய்வது, எனவே இரு அரசுகளும் இணைந்துவிடும் என்றனர்; இஃதன்றோ தேசிய ஒற்றுமை என்றனர். இந்தப் பெரும் புகழினை முதலில்பெற என் முதலமைச்சர் தவறிவிட்டாரே, என்று கூறித் தவியாய்த் தவித்தார் நிதி அமைச்சர் சுப்ரமணியம். டாக்டர் ராய், மிகச் சிறந்த ராஜதந்திரி, தேசபக்தர்; குறுகிய நோக்கமற்ற குணசாலி, எனக்குத் தெரியுமே.—என்று ஆச்சாரியார் கூறினார்; வாழ்த்தினார்; வங்கம் வழி காட்டுகிறது, தங்கமான திட்டம், இணைப்பு; எனவே நாமும் இங்கு தட்சிணப் பிரதேசம் அமைப்போம் தயாராகுக என்று பிரகடனம் வெளியிட்டார்.

இவையாவும், மக்கள் மறந்துவிடக் கூடிய அளவு பழங்கதையாகிவிடவில்லை.

தலைவர்கள் தீர்மானித்தனர்; மக்கள் உடைத்தெறிந்தனர்; இணைப்புத் திட்டத்தை.

வங்கம் போர்க்கோலம் பூண்டெழுந்தது, வயோதிகர் என்கிறீர், உமக்கேனய்யா இந்த வகைகெட்ட வேலை, என்று கேட்டது டாக்டர் ராயைப் பார்த்து; 'ஜனகணமன' பாடினார், எங்களுக்கும் தெரியுமய்யா அந்தக் கீதம், போதும் நிறுத்தும் என்றனர்; வாக்களித்துவிட்டேன் என்றார், யாரைக் கேட்டுக்கொண்டு? என்று கேட்டனர்; தேச ஐக்யத்துக்குத் தேவையான திட்டம் என்றார், தேசம் எம்முடையது, எமது உரிமை, எமது உடைமை, உமது விருப்பத்திற்கேற்றபடி உருவம் கொள்ளுவதல்ல, என்றனர் மக்கள்.

மக்கள் வென்றனர், டாக்டர் ராய் தோற்றார். இணைப்புத் திட்டம் இறந்து பட்டது. பிணத்தை டில்லிக்கு அனுப்பினார். ஒரு சொட்டுக் கண்ணீரும் விடவில்லை. மக்களின் தீர்ப்பு, நான் அதற்குக் கட்டுப்பட்டவன் என்று ஜனநாயகம் பேசினார்.

இப்போது 300 சதுர மைல், வங்கத்துக்கு வந்தாக வேண்டும் என்று வாதாடுகிறார்.

இவர்களெல்லாம், தலைவர்களாக, காங்கிரஸ்காரர்களாகத்தான் உள்ளனர்.

நாம், இங்கு, உரிமைக்குக் கிளர்ச்சி நடத்தும்போது மட்டும் மேலிடத்தார், மேதாவித் தனத்தைக் காட்டவோ, நமது ஏமாளித்தனத்தை அறிந்துகொண்டதைத் தெரிவிக்கவோ,

தேசீயம்
பாரததேசம்

என்று பாசவலை வீசுகிறார்கள்,

மொழி வெறி
மாகாணப் பித்து
பிளவு சக்தி
குறுகிய நோக்கம்
கலகப் புத்தி

கொண்டவர்கள் நாம் என்று ஏசுகிறார்கள்! கேட்டுச் சகித்துக்கொள்ள வேண்டி இருக்கிறது,

நாட்டுப் பற்று
வரலாறு
மொழிப் பற்று
இனப் பற்று

இல்லாதாரிடம் சிக்கிக்கொண்டு இருப்பதனால்.

குளத்துக்காக, மேட்டுக்காகச் சண்டையா என்று பேசுகிறார்கள்.

மண்ணுக்காக, மண்டையை உடைத்துக்கொள்வதா என்று கேட்கிறார்கள்.

மரத்துக்காகவே வாதாடுகிறார் ஏ. கே. கோபாலன்.

மலையாளத்துக்குச் சொந்தமான **'தேக்கு மரங்களை'** சென்னை ராஜ்யத்தார் வெட்டி எடுத்துக் கொண்டு போகிறார்கள்.

திரு-கொச்சிக் காடுகளில் உலவ வேண்டிய யானைகளை கோவைப் பகுதி காட்டுக்கு ஓட்டிக்கொண்டு போய் விடுகிறார்கள், சென்னை ராஜ்யக்காரர்கள்!—என்று ஏ. கே கோபாலன், கேட்கிறார். சென்னை அரசு, இல்லை, இல்லை! என்றுதான் பதிலளிக்கிறதே தவிர, "மரத்துக்காவா கோபாலரே, இப்படிக் கோபம் கொள்கிறீர்" என்று கேட்கவில்லை.

கோபாலன்—தோழர் கோபாலன்—கம்யூனிஸ்டு தான்.

'அகில இந்தியா'வில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்தான்.

கொண்டவரோ இல்லையோ நாமெல்லாம் 'அகில இந்தியா'வை திட்டமாகக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருப்பவர்.

அகில இந்தியா எனும் கொள்கை மகத்தானது — ஆனால் தேக்கு மரம் விலை மதிப்பு உயர்ந்தது! என்கிறார்.

மரத்துக்கும் மதகரிக்கும் அவர், உரிமை கொண்டாடுகிறார், நாம் தமிழ் இனத்தின் தன்மானத்துக்குப் போராடும் போது,

குறுகிய மனப்பான்மையினர்

என்று குற்றம் சாட்டப்படுகிறோம்; நமக்கு இருக்கும் முதலமைச்சரோ, குளமாவது மேடாவது என்று கேட்டுத் தெளிவளிக்கிறார்.

அங்கேயோ, "பாய்-பாய்" (சகோதரர்) என்று கொஞ்சிக்கொண்டிருந்தவர்கள் "சோர்-சோர்" (திருடன், திருடன்!) என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

★

<u>முகப்பில்......</u>

சைப்ரஸ் தீவின் விடுதலைக்காக மகாரியாஸ் எனும் மதகுரு, கிளம்பினார். அவரை நாடு கடத்திவிட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம். தீவு வொன்றில், திகைத்துக்கிடக்கிறது அக்கிழச்சீயம்.

அவரைப்பூட்டிவிட்டால் விடுதலை இயக்கம் அடங்கிவிடும் என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 'வழக்கம் போல' எண்ணியது! ஆனால், இன்னும் கிளர்ச்சிகள் ஓயவில்லை! சைப்ரசுக்கு விடுதலைகொடு எனும் இயக்கம், பக்கத்து நாடான கிரேக்கத்திலும் பரவிவிட்டது.

கிரேக்கத் தலைநகராம் ஏதன்சில், பிரிட்டிஷாரை எதிர்த்து நடைபெறும் பிரச்சாரங்களும் கண்டன ஆர்ப்பாட்டங்களும் ஏராளம்.

மகாரியாசுக்குப் பிறகு, சைப்ரஸ் விடுதலை இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தும் சாவாஸ்லோய்சிடேஸ் என்பார். அவரதுபடமே இந்த இந்த வார இதழ் முகப்பை அலங்கரிக்கிறது.

குள்ளமான உருவும் திடமனதும் கொண்ட இவர், ஒரு வழக்கறிஞர்! மகாரியாசின் பிரதம சீடர் — கிரேக்கப் பார்லிமெண்டில் அங்கம் வகிக்கும் சைப்ரஸ் குடிமகன்.

"எனக்கு பிரிட்டிஷார் விரோதிகளய்ல! நான் ஒரு சுதந்திரவீரன். என்னுடைய சகோதரனை, பிரிட்டிஷ் சர்க்கார் பன்னிரெண்டு ஆண்டுகள் சிறையில் போட்டது. என்னையும், தீவிலிருக்கக்கூடாது என்று இங்கே வந்திருக்கும்படி வெளியேற்றியது. எனினும் நான், பிரிட்டிஷாரின் விரோதிகளல்ல. என் நோக்கம், சைப்ரஸ் விடுதலை தான்" என்று தெளிவாகத் தெரிவிக்கிறார், இவர். மகாரியாசுக்குப் பிறகு...! — என்று மமதையுடன் நினைத்த பிரிட்டிஷாருக்கு, இப்போது இவருடைய தலைமை; புதிய சிக்கலைக் கிளப்பியினது.

4-ம் பக்கத் தொடர்ச்சி

கோஷமல்லய்யா! உண்மைதான்! தெற்கு தொழில் துறையில் பின் தங்கிக் கிடக்கிறது என்பதில், எவ்வித கருத்து வேற்றுமையும் இருக்க முடியாது. கழகத்தார் சொன்னலும். காங்கிரசிலிருந்தவர்கள் தெரிவித்தாலும், உண்மை உண்மைதானே என்று அறிவிக்கிருர். எனினும், யாராவது மேலும் ஐயப்படுவார்களல்லவா அதனல்,

"யூனியன் நிதிமந்திரியே ஒப்புக்கொண்டிருக்கும் உண்மை இது." என்கிருர்.

இப்படித் தெரிவிப்பவர், யார் என்பதைக் கண்டபோதுதான் நமக்கு ஆச்சரியமும் அதிசயமும் ஏற்படலாயிற்று! அரசியல் தொடர்பும் அதே சமயத்தில் கட்சிக் கலப்புமற்ற ஆற்காடு இராமசாமியோ, சச்சிவோத்தமரோ, காமராஜரின் மந்திரிசபையில்அல்ல; நமது நிதியையும்மதியையும் நிர்வகிக்கும் பொறுப்பேற்றிருக்கிற சுப்பிரமணியம் தான் இவ்வண்ணம், வடக்கு தெற்கை வஞ்சிக்கும் விதத்தை வர்ணிக்கிருர்.

சுப்பிரமணியம், அனுதினமும் கழகம் அழிந்துவிடும் என்று ஆருடம் கணிப்பவர், நெற்றிக்கண் ஒன்றிருந்தால் இந்த நிரீசுவர வாதிகளை அழித்துவிடலாமே ஐயன் ஏன் அதை நமக்கு அருளவில்லை என்கிற ஆயாசம் கொண்டவர், ஆச்சாரியாரின் சீடர், அவர் தெரிவிக்கிருர், இவ்வண்ணம்.

ஜுலை 7-ந் தேதி தூத்துக்குடியில் நடைபெற்ற மகாண எஃகு இரும்பு விற்பனையாளர்கள் மாநாட்டைத் துவக்கிவைத்தபோதுதான் இவ்வாறு வெளியிட்டிருக்கிருர்!

யூனியன், நிதிமந்திரியே ஒப்புக்கொண்ட உண்மை என்ருரே, அது எங்கே என்கிற விபரம் கேட்பீர்களல்லவா? அவரே தெரிவிக்கிருர், "குண்டா மின்சார உற்பத்தித் திட்டத்தைத் துவக்கிவைத்தபோது, யூனியன் நிதி மந்திரி சொன்னர்..." என்பதாக. யூனியன் நிதிமந்திரி தேஷ்முக், சொன்னவிபரத்தைப் பார்க்கிறபோது, அமைச்சருக்கு வியப்பாயிருந்திருக்கிறதுபோலும்.

நாட்டில் வாழும் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 27 வீதம் கணக்கிட்டு செலவழிக்கப்பட்டு வருகிறது, ஐந்தாண்டுத் திட்டத்தில். ஆனல் சென்னையில் மட்டும் 19-ரூபாயே ஒரு தனி நபருக்குச் செலவழிக்கப்படுகிறது.

டில்லி நிதியமைச்சர் தரும் விபரம் இது! இந்தியா முழுதும் தலைக்கு 27-ரூ வீதம் செலவழிக்கிருர்களாம் நாடு முன்னேற; ஆனல் சென்னையில்மட்டும் ரூபாய் 19-தானும்!

இந்த இலட்சணத்தில், குற்றுலம் சென்று, கோலோச்சும் காமராஜர் கூறுகிருராம், வடக்கு எங்கே தெற்கை ஏமாற்றுகிறதென்று! அவருக்குத் தாளம் தட்டியிருக்கிருர், டி. டி. கிருஷ்ணமாச்சாரி என்னும் டில்லி மந்திரி.

வங்கத்திலும், பம்பாயிலும் தேசிய சராசரியைவிட ஆறு மடங்கும் ஐந்து மடங்கும் செலவழிக்கப்பட்டு வருகிறது!

கூறுவது நாமல்ல, நிதி அமைச்சர்.

தென்னட்டை விட
ஐந்து மடங்கு
ஆறு மடங்கு

வங்காளத்துக்கும் பம்பாய்க்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழிக்கப்பட்டுவருகிறதாம்! கேட்டீர்களா, இதனை — அமைச்சர், தெரிவிக்கிருர்!

"சோஷியலிய சமுதாயத்தை நிறுவ வேண்டுமென்று பாடுபட்டுக் கொண்டிருக்கிற இச் சமயத்தில், ஒரு ராஜ்யத்துக்கும் இன்னெரு ராஜ்யத்துக்கு மிடையே ஏற்றத் தாழ்வு இருக்கலாமா?"

கேட்கிருர், நிதியமைச்சர்! நிச்சயம் இருக்கக்கூடாது என்று தான் கருதும், இமய முதல் குமரி வரை சோஷலிச சமுதாயம் உருவாக வேண்டுமென்று கருதும் அரசாங்கமாயிருந்தால்!

டில்லிக்கு, அந்த எண்ணம் கிடையா தென்பதை, நாம் இது போன்ற சம்பவங்களைக் கொண்டு தானே கூறுகிரேம்.

இருந்தும், அமைச்சர்கள், உணர மறுக்கிருர்கள்! புள்ளிவிபரம் வடக்கின் சூதினை உணர்த்தினலும் உணர மறுக்கிருர்கள்.

இல்லையெனில், தூத்துக்குடி சென்று, கண்ணீரைக் கொட்டும் 'கனம்', ஐந்தாண்டுத் திட்டத்துக்கு அதிகப்பணம் கோரி, டில்லிக்குச் சென்று, குட்டுப்பட்டு வந்த தினமே, கூறியிருக்கலாமே டில்லியின் போக்கை! "வேண்டாம் இந்தப் பதவி, வேஷதாரிகளய்யா, நீங்கள்", என்று சொல்லியிருக்கலாமே!

ஒரு நாட்டு நிதி மந்திரியே இப்படிச் செய்தார் எனின், டில்லிக்கு எவ்வளவு அச்சமும் திகிலும் பிறக்கக்கூடும். அதற்குப் பதில், தலையாட்டித் தம்பிரான்களாக இருந்துவிட்டு, ஓலமிடுகிருர்.

"...ஆகவே நாட்டிலிருக்கும் சகல மக்களும் ஒற்றுமையாக, எங்களுக்குத் தொழில் வளர்ச்சி வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும்"

மக்கள், வலியுறுத்த வேண்டுமாம், எப்படி? எம்முறையில்? — என்பது குறித்து விளக்கமேதுமில்லை, அமைச்சரிடமிருந்து. ஆனல் அழகாகச் சொல்லுகிருர், ஒற்றுமையாக, சகல மக்களும் ஒன்று சேர்ந்து வலியுறுத்த வேண்டும் என்று.

அந்தக் காரியத்தைத்தானே, தி. மு. க. செய்து வருகிறது.

அபபடிச் செய்யும், தி. மு. க. மீது மட்டும் இவர் சீறுவார்! சினம் கொள்வார்! சீச்சி, என்பார்!— அப்போதுதானே, காங்கிரஸ் சார்பில் அமைச்சர் பதவி கிடைக்கும்! ஆதலால், மக்களே போராடிப் பொறுப்பைப் பெற வேண்டியது நீங்கள்— அதற்கு வழி என்ன தெரியுமா? ஒற்றுமையாக, சகலரும் ஒன்றுகூடி வலியுறுத்துங்கள் என்கிருர்!

நீங்கள் ஒற்றுமையாகச் சகலரும் சேர்ந்து வேலை செய்து, டில்லியிடமிருந்து பணம் வாங்கிக்கொடுங்கள்-நான், அமைச்சர்வேலையை மட்டும் சுவையுடன் பார்த்துக்கொள்கிறேன், என்கிருர். சோகமும், அந்தளவில் நின்று விடுகிறது; வேதனையைக் கண்டு, வீரம் எழவில்லை. இருந்தாலன்ரே எழ? அதுதான் பதவியாசைக்கு இரையாகப் போய் விட்டதே!

★

உலக அரங்கில்

எகிப்து

★

நேருவின் நண்பர் நாசர், எகிப்தின் ஜனாதிபதியாக அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டார் அல்லவா? அவருடைய சர்க்கார், செய்திருக்கிற முக்கிய முடிவு கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டுக்குப் பாதுகாப்புச் செலவுக்கென்று 230 லட்சம் பவுன்களை அதிகப்படுத்தியிருப்பதாகும். நேருவைப்போல, 'பஞ்சசீலம்' பேசுகிறவர்தான் இந்த நாசரும்.

✱

சிரியா

★

மத்திய கிழக்கிலுள்ள, இஸ்லாமிய நாடுகளில் ஒன்றான சிரியா, எகிப்தோடு இணைந்து வாழ்வதென்கிற முடிவுக்கு வந்துளளதாம். இரண்டும் இனிமேல், ஒரே கூட்டுநாடாக விளங்கக்கூடுமாம். மத்திய கிழக்கிலிருக்கும் பெரும்பான்மை நாடுகள் இஸ்லாமிய நாடுகள்தான். அவையாவும் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும் என்கிற பேச்சு பல்லாண்டுகளாகவே அடிபட்டு வருகிறது. ஏனெனில் அவர்கள் அனைவருக்கும், மத்யகிழக்கில் சமீபத்தில் ஏற்பட்ட யூதர்களின் நாடான இஸ்ரேல் மீது எபபோதும் எரிச்சல் உண்டு! இஸ்ரேலை ஒழித்துக்கட்டுவது எப்படி என்பதுதான், அவர்களுடைய நோக்கம். இதில் எகிப்தும், சளைத்ததாயில்லை. இங்கிலையில், இராணுவச் செலவினை வேறு உயர்த்தியிருக்கிறது. சிரியாவும் எகிப்தும் இணைந்து வாழுகிற நிலை ஏற்படுமேயானால், இஸ்ரேலின் ஆபத்து அதிகமாகிறதென்றே கருதப்படும்.

✱

அமெரிக்கா

★

அமெரிக்காவில் கடந்த ஒரு வாரமாக எஃகுத் தொழிலாளர்களின். மாபெரும் வேலைநிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில், சுமார் ஒரு இலட்சம் பேர் ஈடுபட்டிருப்பதால், அமெரிக்கவின் எஃகு உற்பத்தி மிகவும் பாதிக்கப்படுமென்று கருதப்படுகிறது.

✱

ஆலந்து

★

ஆலந்து ராணி ஜூலியானாவின் கடைசிப் புதல்விக்கு ஒரு கண் தெரியாமலிருக்கிறதாம்! இதைக் கேள்வியுற்ற மக்களில் பலர், தமது கண்களில் ஒன்றைத் தத்தம் செய்வதாக, ராணிக்குக் கடிதம் எழுதியுள்ளனராம். ஆனால் மருத்துவ அறிஞர்கள், இந்த அன்பளிப்பால், கண் பார்வையைத் திரும்பப் பெற இயலாது என்று கருதும் காரணத்தால், இவைகளை மறுத்துள்ளார்கள்.

✱

பார்மோசா

★

"ஆகா! உங்களுடைய வீரம் யாருககு வரும்? செஞ்சீனா பெரிய நாடாகயிருந்தும் தைரியமாக எதிர்த்து நிற்கிறீர்களே! இப்படிப்பட்ட வீரர்களால்தான், பொதுவுடைமைக்குப் பதில்கூற இயலும். தங்களுக்கு எப்போதும் போல, நாங்கள் உதவியளிப்போம், கலங்க வேண்டாம்" என்று பார்மோசாத் தீவில் கிடக்கும் சியாங்கேஷேக்குக்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவர் ஜூலை 8-ந் தேதி ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்!

✱

செஞ்சீனா

★

வெளிநாடுகளில் அவதியுறும் சீனர்களைத்தமது தாயகத்துக்கு அழைத்துக்கொள்வதில் புதிய சீனா மிக்க ஆர்வம் காட்டி வருகிறது. இதன் காரணமாக, மலேய இரப்பர் காடுகளில் உழைத்து வாழ்ந்த 3000 சீனர்கள், கடந்த ஜூலை 8-ந்தேதி சிங்கப்பூரைவிட்டு சீனத்துக்கு கப்பலேறியுள்ளார்கள். இவர்கள் அனைவரும், மலேயாவில் வறுமைக்கு ஆட்பட்டு உழன்றவர்களாகும்.

✱

பாகிஸ்தான்

★

அல்ஜீரியாவில் பிரெஞ்சு சர்க்கார் அட்டூழியம் செய்துவருகிறதல்லவா? அதைக் கண்டிக்க பாகிஸ்தான் தலைநகரான கராச்சியிலுள்ள சிகை அலங்கரிக்கும்தொழிலாளர்கள் சங்கம் ஒருபுது முறையைக்கண்டுபிடித்திருக்கிறது. காராச்சியிலுள்ள பிரெஞ்சு தூதருக்கும் அவர் காரியாலயத்தில் வேலை பார்ப்போருக்கும் கிராப் செய்யவோ, முகக்ஷவரம் செய்யவோ, மறுப்பது என அவர்கள் முடிவு செய்தனர். அதோடு, பிரெஞ்சுச் சரக்குகளை வாங்குவதில்லையென்றும், இந்த விதிகளை பாகிஸ்தானிலுள்ள எந்த நாவிதராவது மீறினால் அவரை சங்கத்திலிருந்து அகற்றி சமூக பகிஷ்காரம் செய்வது என்றும் முடிவு செய்துள்ளனர்!

✱

இலங்கை

★

இலங்கையின் முன்னாள் பிரதமரான கொத்தலவாலா, இங்கிலாந்தில் நிலம் வாங்கபபோகிறாராம்! இது சம்பந்தமாக, தென் இங்கிலாந்தில் கென்ட் பகுதியில் ஒரு வீடும் பத்து ஏக்கர் நிலமும் பார்க்கப்பட்டு, விலை பேசி வாங்குவதற்காக இப்போது இங்கிலாந்துக்குப் போயிருக்கிறாராம்.

★

கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முன்பு இலண்டன்மாநகரில் சிறு நூல் ஒன்று பிரசுரமாயிற்று. "ஆகா! உலகத்திலேயே மிகச் சிறந்தது." என்றும் "நீங்கள் படித்தீர்களா?", என்பதாகவும் எல்லோரும் கேட்டுக்கொள்ள ஆரம்பித்தார்கள். அந்த நூல் பிரசுரமான முதல் நாளே 1000 பிரதிகள் விற்பனையாயிற்று. பதினைந்து நாட்களுக்கெல்லாம் 15000 பிரதிகளை, அடித்துக் குவிக்க நேர்ந்தது. அது முதல் இது வரை எத்தனையோ தடவைகள் அச்சடிக்கப்பட்டு, எவ்வளவோ இலட்சங்கள் விற்பனையாகியிருக்கிறது. அந்நூலின் கையேட்டுப் பிரதியை மார்கன் என்னும் அமெரிக்கர் பல லட்ச ரூபாய் கொடுத்து வாங்கி, நியுயார்க்கிலுள்ள கலைக் காட்சியில் கொண்டுபோய் வைத்திருக்கிறார்.

'கிருஸ்துமஸ் கீதம்'! என்னும் பெயர் கொண்ட அந்நூலின் ஆசிரியரான சார்லஸ் டிக்கன்ஸ்தான், படத்திலிருப்பவர். ஆங்கில இலக்கிய உலகில், நாவல் எழுதுவதில் ஈடு இணையற்றவரென விளங்கிய இவர் பள்ளியில் படித்தது நான்கே ஆண்டுகள்தான்! ஆரம்பத்தில் இவர் எழுதத் துவங்கியதும், கேலி செய்தோர் பலராம். அதனால், தன் கதையை யாருக்கும் தெரியாமல், இரவு நேரத்தில் போய் தபால் பெட்டியில் அனுப்பி வந்தாராம். அப்போது, 22 வயது அவருக்கு. முதன் முதலில் அவருடைய கதை அச்சாகி வெளியில் வந்தபோது ஆனந்தத்தால் அங்கு மிங்கும் ஓடினாராம்! ஆனால், அப்படி வெளிவந்த கதைக்காக, அவருக்கு ஒரு பைசாகூட தரப்படவில்லை. அதற்குப் பிறகு அவர் தீட்டிய எட்டுக் கதைகளும் என்ன கொடுத்திருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? பெரிய 'சைபர்'தான்! முதன் முதலில் யாரோ ஒரு பத்திராதிபர் பெரிய மனது வைத்து, ஒரே ஒரு பவுன் அன்பளிப்பு அளித்தாராம். ஆனால், அவருடைய கடைசி நாவலை, எழுத்து ஒன்றுக்கு மூன்று பவுன் கொடுத்து வாங்கினார்கள் — நூல் வெளியிடுவோர்.

இவருடைய பெற்றோர், பெண்களுக்கென ஒரு பள்ளிக்கூடம் நடத்தினார்கள். இருந்தும் இவர் படிக்கவில்லை! எனினும் 17 உலகம் போற்றும் நாவல்களை எழுதினார்! பள்ளிக்கூடத்திலிருந்து என்ன வருமானம் வந்துவிட முடியும்? அதனால், இவருக்குப் பத்து வயது இருக்கும்போது, தந்தை பெருங் கடனாளியானார். கடன்காரர்கள், தந்தையைக் கொண்டு போய்ச் சிறையில் அடைத்துவிட்டார்கள். அதனால் வீட்டிலுள்ள சின்னஞ்சிறுபொருளைக் கூட விற்று வாழ நேர்ந்தது. அப்போது, தான் அருமையாக வைத்திருந்த நூல்களைக் கூட அழுது கொண்டே விற்றாராம்! இவர் கூடப்பிறந்த நால்வருடனும், அன்னை அனுபவித்த சிரமம் கொஞ்சமல்ல. இவருக்கு, முதலில், பாட்டில்கள் மீது லேபிள் ஒட்டும் உத்தியோகம்தான் கிடைத்தது. அப்போது இவர் வாழ்ந்தவாழ்க்கையின் பிரதிபலிப்புதான் 'ஆலிவர்ட் விஸ்டு' நாவலில் தட்டை நீட்டிய வண்ணம் 'ஐயா இன்னும் கொஞ்சம் கஞ்சி!' என்று கேட்கும் கட்டம். வேதனைக்கிடையே வாழ்ந்த டிக்கன்ஸ், அப்போதைய இங்கிலாந்தைப் படம் பிடிக்கலானார் தன் நாவல்களில்! பேரும் புகழும் தேடி வந்தது. உலகமே, தலை மீது வைத்துக் கொண்டாடிய நாவல் மன்னனுடைய இல்லற வாழ்க்கை எப்படியிருந்தது தெரியுமா? ஒரே சோக மயம்! எலியும் பூனையுமாக வாழ்ந்தார்கள்!! அந்த வேதனை பொறுக்க முடியாமற் போகவே, தனது பத்திரிகையில், தான் அவளை விவாகரத்து செய்து விட்டதாக அறிவித்தார். சாகும்போது தன்னுடைய மைத்துனிக்கு 40,000 பவுன் விட்டு விட்டுப்போன இவர் தன்னுடைய குழந்தைகளுக்கும் மனைவிக்கும் வாரம் 7 பவுன் கிடைக்கும்படி தான் 'உயில்' எழுதினாராம்!! "வண்டு"

★

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு 'திராவிடநாடு' அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.